
ஆதிசங்கரர் அருளிய சுப்ரமணிய புஜங்கம்

(தமிழ் – ஆங்கிலத்தில்) தமிழ் விளக்க உரையுடன்



முனைவர் வ.மீனாட்சி

முது முனைவர் ரெ.சந்திரமோகன்

பேராசிரியர் ச.இராஜமீனாட்சி

ஆதி சங்கரர் அருளிய

சுப்ரமணிய புஜங்கம்

(தமிழ் – ஆங்கிலத்தில்)

தமிழ் விளக்க உரையுடன்

ஆசிரியர்

முனைவர் வ. மீனாட்சி

கற்பகம் தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்

முதுமுனைவர் ரெ. சந்திரமோகன்

பேராசிரியர் ச. இராஜ மீனாட்சி

நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி

கோவிலூர், காரைக்குடி

மணிமேகலைப் பிரசுரம்

எண் 21, தணிகாசலம் சாலை

தியாகராய நகர், சென்னை–600 017.

✆ 044–2434 2926; 2434 6082. 91764 51934

email: manimekalaiprasuram@gmail.com

Web Site : www.tamilvanan.com

நூல் விவரம்

நூல் தலைப்பு	ஆதி சங்கரர் அருளிய சுப்ரமணிய புஜங்கம்
ஆசிரியர்	முனைவர் வ. மீனாட்சி
மொழி	தமிழ்
பதிப்பு ஆண்டு	2025
பதிப்பு விவரம்	முதற் பதிப்பு
உரிமை	நூலாசிரியருக்கு
தாளின் தன்மை	18.6 கி.கி.
நூலின் அளவு	14 x 21 செ.மீ. (டெம்மி)
அச்சு எழுத்து அளவு	14 புள்ளி
மொத்த பக்கங்கள்	xii + 84 = 96
நூலின் இந்திய விலை	ரூ. 110
அட்டைப்பட டிசைன்	பாண்ராஜா கிராஃபிக்ஸ்
லேசர் வடிவமைப்பு	லக்ஷ்மி கிராஃபிக்ஸ், சென்னை - 600 072
அச்சிட்டோர்	ஆதிலெட்சுமி கிராஃபிக்ஸ், சென்னை - 600 094
நூல் கட்டுமானம்	தையல்
ISBN	978-93-6854-418-0

முகவுரை

இந்து மதத்தின் ஆறு வகை சமயங்களையும் ஒருங்கிணைக்க அரும்பாடுபட்டவர் ஆதிசங்கரர். ஆதிசங்கரர் சைவமா? வைணவமா? என்று அவரையே பாதியாக்கிப் பார்த்தனர் நம் மக்கள். "அத்துவிதம்" என்ற சித்தாந்தத்தை முன்னிறுத்தி பாரதம் முழுதும் பயணித்த ஆதிசங்கரர் கணக்கற்ற நூல்களுக்கு விரிவுரையெழுதி உள்ளார். பண்டிதரும் பாமரரும் அவரவரது பக்குவத்திற்கு இணங்க புரிந்துகொண்டு மேன்மையுறும் வழியைக் கண்டவர் ஆதிசங்கரர். அவரது எண்ணற்ற பாஷ்யங்கள் சுமார் ஆயிரம் ஆண்டுகளாக அறுவகை சமயத்தினரையும் ஒருங்கிணைகிறது என்றால் மிகையாகாது. கனகதாரா ஸ்தோத்ரம், பஜகோவிந்தம் போன்றவை மிகப் பிரபலமானவை. அவரது புஜங்க பிரார்த்தனைப் பாடல்கள் மிகச் சிறப்புப் பெற்றவை. பாம்பு வளைந்து வளைந்து செல்லும் வடிவில் அமைக்கப்பட்டிருக்கும் அதில் "சுப்ரமணிய புஜங்கம்" என்ற நூல் மிக எளிமையான, அரிதான பொருள்கள் அமைந்ததாகும். இதன் பொருள் அனைவருக்கும் தெரியும் வண்ணம் எளிய தமிழில் உருவாக்க முயற்சித்துள்ளோம். கலியுக வரதன், கண்கண்ட தெய்வம், திருச்செந்தூர் செந்திலாண்டவனின் பூரண அருள் கிடைக்க வேண்டுகிறோம். முருகப்பெருமானின் அருள் திருவிளையாடல்களை புஜங்க விருத்தத்தில் தரிசிப்போம்.

"யாம் ஓதியகல்வியும் எம் அறிவும்
தாமே பெற வேலவர் தந்ததனால்"

என்பார் அருணகிரியார். சுப்ரமணிய புஜங்கத்தைப் பாராயணம் செய்தால் நல்ல மனைவி, பிள்ளைகள், நீண்ட ஆயுள் முதலியவை கிடைக்கும். முடிவில் முருகப் பெருமான் திருவடியும் கிடைக்கும். இதில் முருகனின் அடி முதல் தலை வரை வர்ணனை இடம் பெற்றுள்ளது. மேலும் சுப்பிரமணிய உபாசனை, நோய் நீக்கும் மந்திரம், ஆறெழுத்து மந்திரத்தின் பெருமை, விபூதி விழுச்செல்வச் சிறப்பு, சக்திவேலின் சிறப்பு என்று பல செய்திகள் இடம்பெற்றுள்ளன. ஆங்காங்கே பிற நூல்களில் இருந்தும் எடுத்துக்காட்டுகள் தரப்பட்டுள்ளன. திருச்செந்தூர் சுப்பிரமணியனே இந்நூலுக்கு நாயகன். 33 சுலோகங்கள் கூடுதலாக 6. திருவேங்கையன் என்பவர் இந்நூலுக்கு உரை எழுதியுள்ளார். அதனடி ஒற்றி இந்நூல் இன்னும் எளிமையாக வழிநூலாக உருவாகியுள்ளது. நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் ரெ.சந்திரமோகன் மற்றும் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் வ.மீனாட்சி, ஆங்கிலத்துறைப் பேராசிரியர் இராஜமீனாட்சி இணைந்து உருவாக்கம் பெற்றுள்ளது. ஆன்றோர் அனைவரும் நிறை செல்வம், நீளாயுள், உயர்கல்வி பெற்று உய்ய செந்திலாண்டவரை வேண்டுகிறோம்.

◆◆◆

என்னுரை

முனைவர் வ.மீனாட்சி
உதவிப்பேராசிரியர் (தமிழ்)
அறிவியல் மற்றும் மனிதநேயத் துறை
கற்பகம் தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்.

முருகனின் திருவருளால் ஆதிசங்கரர் அருளிய சுப்ரமணிய புஜங்கத்திற்குத் தமிழில் உரை எழுதும் பேறு பெற்றேன். எழுதும்போது பல இன்னல்கள் நேரிடினும் அதனை எல்லாம் கடந்து எழுதிமுடிக்க உதவிய தமிழ்க் கடவுள் முருகனுக்கு நான் என்றும் சேயே. திருச்செந்தூர் தலத்திற்கு முந்தைய பெயர், புராணச் செய்தி ஆகியவற்றை முற்று முழுதாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. குன்றிருக்கும் இடமெல்லாம் குமரன் இருப்பான் என்பதற்கேற்ப முருகனின் தலங்கள் பெரும்பாலும் மலைமீது தான் இருக்கிறது. திருச்செந்தூர் தலம் மட்டும் கடற்கரையில் உள்ளதே என்னும் ஐயத்தைக் களைந்து அத்தலத்திலும் சந்தன மலை எனும் ஒரு மலை இருந்ததற்கான சான்றுகள் ஆதிசங்கரரின் பாடல்கள்மூலம் தெளிவாகின்றது. இன்றும் திருச்சீரலைவாய் தலத்திற்குச் சென்று வழிபாடு செய்யும் போது அங்குள்ள திருமால் உருவம் பள்ளிகொண்ட நிலையில் மலையில் செதுக்கப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றது. மேலும் வள்ளி குகை என்பதும் மலையின் ஒரு பகுதி என்பதையும் கொண்டு இதுவும் குன்று இருக்கும் பகுதிதான் என்பது தெளிவாகின்றது.

இந்நூலுக்கு உரை எழுத வேண்டும் என நாளும் தூண்டுகோலாய் இருந்த நாச்சியப்ப சுவாமிகள் கல்லூரி

முதல்வர் ரெ.சந்திரமோகன் ஐயா அவர்களுக்கு என்றும் நன்றியுடையேன். ஐயம் நேரும் போதெல்லாம் அவரைத் தொடர்பு கொண்ட போது ஐயத்தைத் தெளிவித்தார். பல அரிய செய்திகளையும் கூறி இதனை இவ்வாறு செய்தால் நன்றாக இருக்கும் என ஆற்றுப்படுத்தி உதவி செய்தவர். அவர் இயற்பியல் துறையைச் சேர்ந்தவராக இருந்தாலும் தமிழில் அதீத ஈடுபாடும் ஆர்வமும் கொண்டதால், பல தகவல்களை அவரிடம் கேட்டு தெளிவு பெற்றது பசுமரத்தாணி போல நினைவில் உள்ளன. என்னுடன் ஆங்கில உரை எழுதிய உடன்பிறவா சகோதரி ராஜமீனாட்சி அவர்களுடன் இணைந்து பல நிகழ்வுகள், செய்திகள் குறித்து கலந்துரையாடிய நிகழ்வில் எனக்கு தெரியாத பல புதிய செய்திகளைக் கற்றுக்கொள்ள முடிந்தது.

ஆதிசங்கரர் எழுதிய சுப்ரமணிய புஜங்கத்திற்கு உரை எழுதலாம் என எண்ணம் தோன்றியதன் நோக்கம் 33 சுலோகங்களும் அதன் உரைகளும் வடமொழியில் இருப்பதால் நம்மால் அதிலுள்ள கருத்துகளை எளிதில் புரிந்து கொள்ளமுடியாத நிலையில் இருப்பதால் தமிழில் இருந்தால் நன்றாக இருக்கும் என்பதை உணர்ந்த முதல்வர் முனைவர் சந்திரமோகன் அவர்களின் கனவே இன்று நினைவாக மாறியுள்ளது. செந்தூரனின் புகழை எழுத வேண்டுமானால் அனுபவம் வேண்டும். ஆனால் எவ்வித அனுபவமும் இல்லாத என்னையும் சேயாய் எடுத்துக் கொண்டு எழுத வைத்த பெருமை பழனியப்பனையே சேரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

சுப்ரமணிய புஜங்கம் முருகனுக்கு உரியது. இதன் சிறப்பாக எனக்குத் தோன்றுவது ஆசிரியர்களின் பெயர்களே. புஜங்கப் பாடலின் தமிழாக்கத்தை நமக்குக் கொடுத்தவர் சந்திரமோகன் எனும் பெயர் கொண்ட சிவபெருமான் (முருகனின் தந்தை).

பாடலுக்குத் தமிழ் உரை எழுதியவர் மீனாட்சி (முருகனின் தாய் பார்வதி). பாடலுக்கு ஆங்கில உரை எழுதியவர் இராஜமீனாட்சி (முருகனின் தாய் பார்வதி). இதன் மூலம் மகனின் முன்னேற்றத்திற்கும் அவனது பெருமையைப் பறை சாற்றுவதும் பெற்றோரின் கடமை என்பது இதன் மூலம் தெளிவாகின்றது. இந்நூலுக்கு உரை எழுத உதவிய என்னுடைய பெற்றோர்களுக்கும், உடன் பணியாற்றிய பேராசிரியப் பெருமக்களுக்கும், உரை எழுதும்போது பணியாற்றிய நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரிக்கும், நூல் வெளிவரும்போது பணியாற்றி வரும் கோயம்புத்தூர் கற்பகம் தொழில்நுட்பக் கல்லூரிக்கும் என்றென்றும் நன்றியுடையேன்.

Introduction to "Subramanya Bhujangam"

It is with immense gratitude and devotion that I present the English translation of **"Subramanya Bhujangam,"** a revered work originally composed by the great philosopher-saint Adi Shankara. This hymn, a poetic masterpiece, glorifies Lord Murugan's divine attributes and spiritual significance. It has touched the hearts of countless devotees, transcending boundaries of language and culture over centuries.

The Tamil translation of this work was meticulously rendered by **Dr. R. Chandramohan,** whose profound understanding of both the Sanskrit original and Tamil poetic traditions brought new life to this timeless hymn. Inspired by his work, I undertook the task of translating it into English, with the hope of making its spiritual essence and literary brilliance accessible to a global audience.

This translation is further enriched by the detailed explanations provided by **Dr. V. Meenakshi,** whose insightful commentary unravels the depth and significance of each verse. Her scholarly interpretations serve as a guiding light, helping readers delve deeper into the spiritual, philosophical, and devotional layers of the hymn.

Purpose of the Translation

The primary aim of this English translation is to introduce the universal message of **"Subramanya Bhujangam"** to those who may not be familiar with Sanskrit or Tamil. While retaining the devotional fervor and poetic elegance of the original, I

have strived to ensure that the translation remains simple and relatable for modern readers.

Significance of "Subramanya Bhujangam"

This hymn holds a unique place in devotional literature, combining poetic brilliance with profound spiritual insight. It extols Lord Murugan as:

- The divine warrior who vanquishes evil and protects his devotees.
- The embodiment of grace, compassion, and wisdom.
- A guiding light for those seeking liberation and inner peace.

Why This Work Deserves Attention

1. **Universal Appeal:** The hymn transcends linguistic and cultural barriers, offering solace, strength, and spiritual awakening to anyone who approaches it with faith.
2. **Philosophical Depth:** Its verses provide a glimpse into the profound truths of Saiva Siddhanta and the teachings of Adi Shankara.
3. **Devotional Power:** Reciting or reflecting on these verses is believed to invoke Lord Murugan's blessings, heal the afflicted, and dispel negativity.

My Journey as a Translator

Translating "Subramanya Bhujangam" has been a deeply transformative experience. It has not only strengthened my personal devotion but also enriched my understanding of the

hymn's spiritual and literary significance. Every verse resonates with divine energy, and it has been both a privilege and a responsibility to convey its essence in English.

Acknowledgments

I express my heartfelt gratitude to **Dr. R. Chandramohan,** whose Tamil translation served as the foundation for this work, and to Dr. V. Meenakshi, whose explanations illuminate the deeper meanings of the verses. Their contributions have been instrumental in bringing this translation to life.

An Invitation to Readers

I invite readers to immerse themselves in this hymn, not merely as a literary work but as a spiritual journey. May the words of **"Subramanya Bhujangam"** inspire, uplift, and transform your hearts. Let us approach this sacred work with reverence and gratitude, seeking the eternal grace of Lord Murugan, who resides both in the heavens and within us.

Relevance Today

In an era of distractions and spiritual disconnect, **"Subramanya Bhujangam"** offers a timeless refuge. Its verses remind us of the power of faith, the need for inner discipline, and the eternal grace of the divine. The hymn's ability to harmonize devotion with intellectual inquiry makes it as relevant today as it was centuries ago.

Conclusion

"Subramanya Bhujangam" is not merely a hymn but a spiritual treasure that inspires devotion, heals the afflicted, and enlightens seekers. It is a work that blends literary

brilliance, divine devotion, and philosophical insight, offering something for everyone. Reading, reciting, and reflecting on this hymn can transform one's life, opening the path to divine grace and eternal peace.

Whether you are a scholar, a devotee, or someone seeking solace, "Subramanya Bhujangam" is a must-read for its profound ability to connect the human with the divine.

With devotion,

Ms. Rajameenakshi. C
(Asst., Professor)

தலப் பெருமை

முருகப்பெருமானின் ஆறுபடைவீடுகளில் இரண்டாம் படை வீடாகத் திகழும் திருச்செந்தூரில் அமைந்துள்ள சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் ஒரு கடற்கரைக் கோயிலாக அமைந்துள்ளது. முருகப்பெருமானின் படைவீடு அனைத்தும் மலைகளில் அமைந்திருக்க இத்திருத்தலம் வங்காள விரிகுடா அருகில் அமைந்துள்ளது தனிச்சிறப்பு ஆகும். மேலும் இத்திருக்கோயில் ஆதிகாலங்களில் இருந்த சந்தனமலையின் ஒரு பகுதியாக அமைந்திருக்கிறது. இத்திருத்தலம் புனிதமாக கருதப்பட்டு வணங்கப்படும் சிறந்த தலத்தில் ஒன்றாகும். இத்திருக்கோயில் தென்னிந்திய தீபகற்பத்தின் தென் கிழக்கில் அமைந்துள்ளது. தமிழனின் பண்டைய நூல்களில் குறிப்பிடுவது போல் இத்திருக்கோயில் சுமார் 2000 ஆண்டுகளுக்கும் மேலான கட்டமைப்பு உடையதாக கருதப்படுகிறது. பக்தி இலக்கியங்களிலும் முருகப்பெருமானின் வழிபாடு சங்ககாலத்தில் குறிப்பாக திருமுருகாற்றுப்படையில், இத்திருத்தலம் அதிகமாக குறிப்பிடப்படுகிறது. ஆறுபடை வீடுகளில் திருச்செந்தூர் முக்கியத்துவம் வாய்ந்த இரண்டாவது இடத்தை பெற்றுள்ளது. இந்தக் கோயில் கடலோரத்தில் அமைந்திருக்கும் அதே சமயம், முருகப்பெருமானின் மற்ற கோயில்கள் மலை உச்சிகளைப் போன்ற உயரமான இடங்களில் அமைந்துள்ளன. பாண்டியரும் சேரரும் அவரது ஆட்சியாளர்களும், பக்தி கொண்டவர்களும் இத்திருக்கோயிலை மேம்படுத்தினர். மகாராஜா மார்த்தாண்ட வர்மா நான்கு நூற்றாண்டுகளுக்கு முன்பு முதன் முதலாக ஒவ்வொரு நாள் காலையிலும் உதயமார்த்தாண்டா கட்டளையை வழங்கினார்.

மற்றவர்கள் அன்றைய ஒன்பது கால ஆராதனைகளைப் பின்பற்றினர். காலப்போக்கில் கடல் மற்றும் அதன் உப்பு நிறைந்த காற்றின் விளைவாக அசல் கட்டுமானத்தில் முதலில் பயன்படுத்தப்பட்ட தாழ்வான மணல் கற்கள் சரியத் தொடங்கின. அப்போது ஒரு உன்னத சாது மௌன சுவாமி அவர்கள் கற்கள் சிதைந்த நிலையில் இருப்பதை கண்டார். அவர் உடனடியாக புனரமைப்பு மேற்கொண்டார். மேலும் மூவர் காசி சுவாமிகள், ஆறுமுக சுவாமிகள், தேசிக மூர்த்தி சுவாமிகள் அவரை பின்தொடர்ந்தனர். 72 ஆண்டுகள் திருப்பணி தொடர்ந்து மூன்று பிராகாரங்களைக் கொண்ட வெள்ளை மணல் - கல் கட்டமைப்பின் ஒவ்வொரு பகுதியும் அகற்றி அழியாத கருங்கற்களால் புதிதாக மீண்டும் கட்டப்பட்டது. திருப்பணியின்போது சாதுக்கள் வறுமையில் வாடிய போதிலும் கூட எல்லா நேரங்களிலும் நிலைத்து நிற்கும் முருகன் கோவிலைக் கட்டினர். மேலும் அனைத்து சன்னதிகளும் புதிதாக கட்டப்பட்டன. திருப்பணி நிறைவு செய்யப்பட்டு 1941-இல் குடமுழுக்கு நடைபெற்றது. ஒன்பது தளங்களைக் கொண்ட கோபுரம் மணல், கல், பாறையின் முனையில் கட்டப்பட்ட ஒரு நிலையான அடையாளம் ஆகும். இத்திருக்கோயில் கடலில் இருந்து பார்த்தால் சுமார் 12 மைல்கள் சுற்றளவுக்குத் தெரியும் அளவுக்கு அமைந்துள்ளது. கோயில் முழுவதுமே கடலில் பாய் மரம் மிதந்து செல்வது போல் காட்சி அளிக்கிறது.

◆◆◆

இலக்கிய பின்புலம்

திருச்செந்தூர் என்றால் "செழிப்பான நகரம்" என்று பொருள். தமிழ் இலக்கியங்களில் "திருச்சீரலைவாய், செந்தில் மாநகரம்" மற்றும் "திருச்செந்தூர்" என்றும் சமஸ்கிருத நூல்களில் "ஜெயந்திபுரம்" மற்றும் "சிந்துபுரம்" என்றும் பிற்கால பாண்டியர்கள் கல்வெட்டுகளில் "திருபுவன மகாதேவி சதுர்வேதி மங்கலம்" என்றும் திருப்புகழில் "திருச்செந்தூர்" என்றும் பல்வேறு பெயர்களில் அறியப்படுகிறது. சங்ககாலப் புலவர் நக்கீரரால் இயற்றப்பெற்ற திருமுருகாற்றுப்படையில் திருச்செந்தூர் இரண்டாவது தலமாக அமையப்பெற்றுள்ளது. அருணகிரிநாதரின் திருப்புகழ் பாடல்களில் திருச்செந்தூரை போற்றிப் புகழ்ந்துள்ளார். அருணகிரிநாதர் முருகனின் அருளைப் பெற்றவர் அவருடைய பாடல்கள் அவர் முருகன் மீது கொண்டுள்ள பற்றுதலை வெளிப்படுத்துகிறது. குமரகுருபர சுவாமிகள் கந்தர் கலிவெண்பா இயற்றினார். இவர் ஸ்ரீவைகுண்டத்தில் பிறந்தவர். இவரது பெற்றோர்கள் திருச்செந்தூர் முருகனிடம் நீண்ட தவத்திற்குப் பின் இவரைப் பெற்றனர். குழந்தைக்கு ஐந்து வயது வரை பேச்சுத் திறன் இல்லை. இதனால் வேதனை அடைந்த பெற்றோர் திருச்செந்தூர் வந்தனர். குமரகுருபரருக்கு ஐந்து வயது வரை பேச்சுத் திறன் இல்லாத காரணத்தால் பெற்றோர்கள் குழந்தையை முருகப்பெருமானின் காலில் கிடத்திவிட்டு கடலில் இறங்க முடிவு செய்தனர். அப்போது முருகப் பெருமான் பெருங் கருணையோடு குழந்தைக்கும், பெற்றோருக்கும் ஒருசேர காட்சியளித்தார். மனித வடிவில் கையில் மலருடன் தோன்றி இது என்னவென்று குழந்தையிடம் கேட்டார். குமரகுருபரர் வார்த்தைகளால் இறைவனை புகழ்ந்து துதித்தார். பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேற்றிய பாமேவு தெய்வப் பழமறையும் என்று - குழந்தை பாடியது (கந்தர் கலி வெண்பா) 244 வரிகள் கொண்ட கந்தர் கலிவெண்பா என்னும் நூலை இறைவனின் திருநாமத்திற்கும் சைவ சித்தாந்தத்தின் உட்பொருளாக விளங்குகின்ற கந்தர்

கலிவெண்பாவை உள்ளன்புடன் ஓதினால் எத்தீமைகளும் நம்மை அணுகாது. நன்மைகள் பல உண்டாகும். குழந்தைகளுக்குப் பேச்சுத்திறன் மேம்படும், பல குறைகளும் நீங்கப்பெறும். இத்தலத்தில் அருள் பிரசாதமாகப் பன்னீர் இலை விபூதி வழங்கப்பட்டு வருகிறது. தேசிகமூர்த்தி சுவாமிகள் கோபுரப்பணி மற்றும் பிராகாரப்பணி இந்த இலை திருநீற்றுப் பிரசாதத்தால் பூர்த்தியடைந்தது. ஆதி சங்கரர் இந்த இலை திருநீற்றின் மகிமையால் வயிற்றுவலி நீங்கப்பெற்று திருச்செந்தூர் சுப்ரமணிய புஜங்கம் பாடினார். இத்தகைய சிறப்பு பெற்ற இத்தலம் முருகப்பெருமானின் திருச்சீரலைவாய் என்று போற்றப்படுகிறது. பின்னர் திருச்செந்தூர் என அழைக்கப்படுகிறது.

◆◆◆

புராண பின்புலம்

முன்பொரு காலத்தில் இரண்டு வெவ்வேறு குழுக்கள் இருப்பது வேதங்களிலிருந்து கண்டறியப்பட்டது. அவர்களில் ஒருவர் தேவர்கள் என்றும் மற்றவர்கள் அசுரர்கள் என்றும் அழைக்கப்பட்டனர். அசுரர் குழு தேவர்களுக்கு எதிராக பல தொல்லைகளை செய்து வந்தார்கள். தேவர்களுக்கு தொல்லை கொடுத்த முக்கிய அசுரர் சூரபத்மன் என்று அழைக்கப்பட்டார். அசுரர் சூரபத்மன் சிவனை நோக்கி கடும் தவம் புரிந்து வரம் பெற்றவன். எனவே தேவர்கள் சூரபத்மன் தமக்கு இழைத்த அநீதிகளை முறையிட்டு அவனை அழிக்க சிவபெருமானை வேண்டுகிறார்கள். சிவபெருமான் தேவர்களின் பிராத்தனையை ஏற்றுக்கொண்டார். தேவர்களுக்கு தொல்லைகள் கொடுத்து வந்த அசுர குல சூரபத்மனை அழிக்க சிவபெருமான் தனது மூன்றாவது கண்ணில் இருந்து வெளிப்பட்ட ஆறு தீப்பொறிகளில் இருந்து முருகப்பெருமானை அவதரிக்க செய்தார். குழந்தையான முருகப்பெருமானை கார்த்திகைப் பெண்கள் சீரும் சிறப்புமாக வளர்த்து வந்தார்கள். பின்பு சிவபெருமான் தேவர்களின்

வேண்டுதல்படி சூரபத்மனை அழிக்க முருகப்பெருமானுக்கு உத்தரவிட்டார். சிவபெருமானின் கட்டளையை ஏற்று சூரபத்மனை அழிக்க முருகன் திருச்செந்தூருக்கு வருகிறார். அப்போது தேவர்களின் குரு வியாழபகவான் முருகப்பெருமானின் அருளாசி பெற தவத்தில் இருந்தார். முருகப் பெருமானும் அவருக்கு தரிசனம் தந்து அருள் அளித்துவிட்டு திருச்செந்தூரை படை வீடாக கொண்டு தனது படையுடன் தங்கி சூரபத்மனை அழிக்க வியூகம் வகுத்தார். அசுரர்களின் வரலாற்றை அவர் வியாழபவனிடமிருந்து அறிந்து கொண்டார் பின்னர் முருகப் பெருமான் தனது நவ வீரர்களில் ஒருவரான வீரபாகுவை சூரபத்மனிடம் தூதுவனாக அனுப்பி, தேவர்களுக்குக் கொடுக்கும் தொல்லையை நிறுத்த வேண்டும் என்று தெரிவித்தார். முருகப்பெருமானின் சமாதானக் கோரிக்கையைச் சூரபத்மன் ஏற்கவில்லை. கடைசியாக முருகப்பெருமான் சூரபத்மன் மீது போர் தொடுத்து, சிவபெருமானிடம் வரம் பெற்ற மாமரமாக உரு மாறிய சூரபத்மனை வதம் செய்யாமல் அவனது ஆணவத்தை அழித்து சேவற்கொடியாகவும், மயிலாகவும் மாற்றி ஆட்கொண்டு தன்னுள் வைத்து கொண்டார். அதனால் முருகப்பெருமான் “சேவற்கொடியோன்” என்றும் அழைக்கப்பட்டார். இந்நிகழ்விற்கு பிறகு, வியாழபகவான் முருகப்பெருமானைத் திருச்செந்தூரில் தங்கி அருள் புரியும்படி வேண்டுகோள் விடுத்தார். பின்னர் வியாழபகவான் உத்தரவின்படி விஸ்வகர்மா இந்த திருக்கோவிலை கட்டினார். சூரபத்மனை அழித்ததில் முருகனின் வெற்றியின் காரணமாக, முருகப்பெருமான் ஜெயந்திநாதர் என்று அழைக்கப்படுகிறார். பிற்காலத்தில் இந்த பெயர் செந்தில்நாதன் என்றும், இந்த இடம் ஜெயந்திபுரம். (ஜெயந்தி - வெற்றி) என்று அழைக்கப்பட்டது என்பது புராண வரலாறு.

◆◆◆

பிரணவ வடிவம்... கடிகார மாளிகை!

செந்திலாண்டவன் ஆலயம் (ஓம்) பிரணவத்தை அடிப்படையாகக் கொண்டு, வாஸ்து லட்சணங்களோடு கட்டமைக்கப்பட்டுள்ளது. கோயில் வடக்கு - தெற்காக 300 அடி நீளமும் கிழக்கு - மேற்காக 214 அடி அகலத்துடனும் அமைந்துள்ளது. கோபுரம், யாளி மண்டபத்துக்கு மேல் 137 அடி உயரமும், 90 அடி நீளமும், 65 அடி அகலத்துடனும் திகழ்கிறது. இதன் ஒன்பதாவது மாடத்தில் கடிகார மாளிகை இருக்கிறது.

முதல் பூஜை

இங்கு மூலவர் தவக் கோலத்தில் இருப்பதாக ஐதீகம். எனவே அவர் கையில் வேலும் அருகில் தேவியரும் இல்லை. செந்திலாண்டவர் ஒரு முகம், நான்கு திருக்கரங்களுடன் நின்ற கோலத்தில் கிழக்கு நோக்கிக் காட்சியளிக்கிறார். மூலவருக்குக் குமார தந்திர முறையிலும், சண்முகருக்குச் சிவாகம முறையிலும் பூசைகள் நடைபெறுகின்றன.

இந்தத் தலத்தை வீரபாகு க்ஷேத்திரம் என்றும் அழைப்பார்கள். அர்த்த மண்டபத்தில் வீரபாகு, வீர மகேந்திரர் இருவரும் காவல் தெய்வங்களாக விளங்குகின்றனர். செந்திலாண்டவனுக்குப் பூசை செய்யும் முன்பு, முதலில் வீரபாகுவுக்குப் பூசை செய்து 'பிட்டு"ப் பிரசாதம் படைத்து வழிபடுகின்றனர்.

கருவறையின் பின்புறத்தில் ஐந்து லிங்கங்களும் கருவறைக்குள் மூன்று லிங்கங்களும் உள்ளன. இவற்றை அஷ்ட லிங்கங்கள் என்பர். அஷ்ட லிங்கங்களும் இங்கு இடம்பெற்றிருக்கக் காரணம், இறைவன் சூரிய - சந்திரராகவும், பஞ்ச பூதங்களாகவும், உயிர்களாகவும் விளங்குகிறார் என்பதை விளக்குவதற்காகவே!

முருகன் சந்நிதியில் முருகனுடன் பஞ்ச லிங்கங்களைக் கண்ணாலும், மற்ற லிங்கங்களை மனதாலும் பூஜிக்க வேண்டும். அப்போதுதான் நமது பிரார்த்தனை முற்றுப்பெறும். அஷ்ட லிங்கங்கங்களில், பஞ்ச லிங்கங்களுக்கு பூஜை நடக்காது. ஏனெனில், முருகப்பெருமானே இந்த லிங்கங்களுக்கு பூஜை செய்வதாக ஐதிகம்.

செந்தூர் முருகனுக்குரிய நைவேத்தியங்கள்

மூலவருக்கான படையலில் காரம், புளி ஆகியவற்றைச் சேர்ப்பதில்லை. சண்முகருக்கான நைவேத்தியங்களில் காரம், புளி உண்டு. பருப்புக் கஞ்சி, தோசை, தேன்குழல், அதிரசம், அப்பம், பிட்டமுது, தினைமாவு ஆகியவை இடம் பெறுகின்றன. உதய மார்த்தாண்ட பூசையின்போது தோசை, சிறுபருப்புக் கஞ்சி ஆகியவை நைவேத்தியத்தில் இடம் பெறுகின்றன. இரவு நேர பூசையில் பால், சுக்கு, வெந்நீர் ஆகியன படைக்கப்படுகிறது.

ரகசிய தீபாராதனை

மூலவரின் தலைக்கு மேல் பெரிய வெள்ளிப் பாத்திரம் ஒன்றைக் கட்டித் தொங்கவிட்டு, அதில் பால் நிரப்பி, சிறு துவாரத்தின் வழியாக பாலை தாரை தாரையாக மூலவரின் மேல் விழச் செய்து சுமார் மூன்று மணி நேரம் நடைபெறும் தாராபிசேகம் இந்தக் கோயிலின் தனிச்சிறப்பு.

இரவு சுமார் 9:45 மணிக்கு சுவாமிக்குத் திரையிட்டு தீபாராதனை காட்டுகின்றனர். பிறகு ஆறுமுகனின் முன் பள்ளியறை சொக்கரை வைத்துத் தீபாராதனை செய்வர். இதை ரகசிய தீபாராதனை என்கிறார்கள். உலோகத் திருமேனியரான ஆறுமுகப் பெருமானுக்கு ஆண்டுக்கு 36 தடவை மட்டுமே அபிசேகம் நடை பெறுகிறது. இதில் விபூதி அபிசேகம் சிறப்பு வாய்ந்தது.

ஆதிசங்கரர் அருளிய சுப்ரமணிய புஜங்கம்: தீராத நோய் தீர்த்த திருச்செந்தூர் மகிமை!

எத்தனையோ மகான்களுக்கும் முனிவர்களுக்கும் திருச்செந்தூர் தலத்துக்கும் எண்ணற்ற தொடர்புகள் உண்டு. முக்கியமாக, ஸ்ரீஆதிசங்கரரின் தொடர்பு மெய்சிலிர்க்கச் செய்யும்.

ஆதிசங்கரரின் கல்வி, தவம், யோகம் முதலியவற்றின் மேன்மையைக்கண்டு பொறாமைகொண்ட அபிநவகுப்தர் எனும் புலவர் மந்திர ஏவலால் அவரைக் காசநோயால் வருந்தும்படிச் செய்தாராம். சிவபிரான் ஓரிரவு சங்கரருடைய கனவில் தோன்றி திருச்செந்தூர் எனும் திருத்தலத்தில் சூரபத்மனை வென்ற "வெற்றி இன்ப வடிவாக" விளங்கும் எனது குமாரனாகிய செந்தில்குமரனைக் கண்டு வழிபட்டால் இக்கொடியநோய் உன்னை அடியோடு விட்டகலும் எனக்கூறித் திருநீறு அளித்தருளினார்.

ஆதிசங்கரரும் தனது யோகசக்தியால் மறுநாள் திருச்செந்தூரை அடைந்தார் அப்போது அங்கு ஆதிசேடன் செந்தில்குமரனின் திருவடிகளில் வழிபடுதலைக் கண்டார். உடனே பாம்பு எனும் பொருளைத்தரும் 'புஜங்கம்' எனும் பெயரைக்கொண்ட புதுவகையான ஒரு செய்யுள் அமைப்பில் சமஸ்கிருதத்தில் முப்பத்துமூன்று கவிதைகள் கொண்ட 'சுப்பிரமணிய புஜங்கத்தை'ப் படைத்தார். தமது நோயும் நீங்கப் பெற்றார். இந்தப் புஜங்கத்தைப் படித்தால் பல நன்மைகள் விளையும் என்று பெரியோர் கூறுவர்.

◆◆◆

திருச்செந்தூர் பெருமை

இலங்கை மன்னன் கண்டி அரசன் கனவில் திருச்செந்தூர் முருகன் தோன்றி, சந்தனமரம் ஒன்றை வெட்டிக் கடலில் மிதக்க விடச் சொன்னார். அப்படியே செய்தான் அரசன். மன்னன் வெட்டித் தள்ளிய மரம் திருச்செந்தூர் கரையை அடைந்தது. இந்த மரமே இன்றுவரை கொடிமரமாக உள்ளது என்கிறது தல வரலாறு. இந்தச் செய்தி திருச்செந்தூர் பிள்ளைத் தமிழிலும் உள்ளது.

திருச்செந்தூர் கோயில் மடப் பள்ளியில் வேலை பார்த்தவர் வென்றிமாலை என்பவர் மிகச் சிறந்த முருக பக்தன். ஒரு நாள் பிரசாதம் தயாரிக்காமல் தியானத்தில் ஆழ்ந்துபோனான். உச்சிக்கால பூஜைக்கு பிரசாதம் இல்லை என்றதும் கோபம் அடைந்த கோயில் நிர்வாகத்தினரால் வென்றிமாலை வெளியேற்றப்பட்டான்!

அவமானம் தாங்காமல் கடலில் விழப்போனான். அப்போது அவனைத் தடுத்து நிறுத்தியது ஓர் அசரீரி. “செவலூர் சாஸ்திரிகளைப் போய்ப் பார்!“ என்றது. அப்படியே செய்தான். அவனிடம், “சம்ஸ்கிருதத்தில் உள்ள தலபுராணத்தைத் தமிழில் உனக்குச் சொல்லித் தர முருகப்பெருமான் கட்டளையிட்டிருக்கிறார்!” என்றார் சாஸ்திரியார்.

பிறகு சாஸ்திரிகள் சொல்லச் சொல்ல, செந்தூர் தல புராணத்தை மொத்தம் 899 தமிழ்ப் பாடல்களாகப் புனைந்தார் வென்றிமாலை. வென்றிமாலைக்குக் கவிராயர் பட்டம் தந்தார் சாஸ்திரியார். திருச்செந்தூரில் அவற்றை அரங்கேற்ற வந்த போது மீண்டும் விரட்டியடிக்கப்பட்டார் வென்றிமாலை.

எழுதிய ஏடுகளைக் கடலில் வீசியெறிந்தார் கவிராயர். ஈழக் கடற்கரையில் கரை ஒதுங்கிய ஏடு, முருக பக்தர் ஒருவரிடம் கிடைத்தது. திருச்செந்தூர் தல புராணத்தின் புகழ் பாண்டிச் சீமையைக் கடந்து, கடல் கடந்தும் பரவியது. எப்படியோ, மூலப் பிரதி திருச்செந்தூருக்கு வந்து சேர்ந்தது. இன்றும் கோயிலில் அது பாதுகாக்கப்படுகிறது.

சுப்பிரமணிய புஜங்கத்தின் பெருமை

இந்நூலில் சுப்பிரமணியக் கடவுளின் பெருமை, உயர்வு, முடிவற்ற தன்மை ஆகியவற்றை இரு விதங்களில் ஆதிசங்கரர் விளக்குகிறார். முதலாவது, வெளிப்படையாக நாம் தரிசிக்கும் திருச்செந்தூர்க் கோவிலும் அலைகளை வீசியெறியும் கடலும் இயற்கையின் பிரம்மாண்டத்தைக் காட்டும். அந்த இயற்கையே இறைவடிவம் கொண்டு விளங்குகிறது. இரண்டாவது, நமது உள்ளத்தில் குடியிருக்கும் இறைவனின் சக்தி - நம்மை ஆள்வதும், மகிழ்விப்பதும், வழிநடத்துவதும் அவனே என உணர்தல் வேண்டும். மானிடராகிய நமக்கு தோன்றாத் துணையாக என்றென்றும் நிற்பவன் இறைவனே!

◆◆◆

புஜங்கம்

"புஜங்கம்" என்றால் "தோளால் நகர்ந்து செல்லும் பாம்பு" என்று பொருள். இச்சொல் வடமொழியில் உள்ள ஒருவகை யாப்பைக் குறிக்கும். இப்புஜங்கக் கவியுள் அமைந்து கிடக்கும் சொற்கோவை பாம்பொன்று வளைந்து வளைந்து செல்லுவது போல் இருப்பதால் இத்தகைய கவிக்குப் புஜங்கம் எனப் பெயருண்டாயிற்று.

◆◆◆

The Glory of the Temple (Thala Perumai)

The Subramanya Swamy Temple at Tiruchendur, one of the six holy abodes of Lord Murugan, stands as a coastal temple. While most of Murugan's abodes are located on hilltops, this temple's unique feature is its proximity to the Bay of Bengal. Historically, it was a part of the Sandhanamalai hill range. Revered as a sacred site, it is one of the most celebrated temples of Tamil Nadu, located in the southwestern part of the Indian Peninsula. Ancient Tamil literature mentions that the temple has a history spanning over 2,000 years. In devotional literature, particularly in the Sangam-era work ***Tirumurugatruppadai*,** this shrine is frequently mentioned, highlighting its prominence as the second of the six holy abodes of Lord Murugan.

Uniquely, while other Murugan temples are located atop hills, this temple is situated on the seashore. The Pandya and Chera rulers, along with devout kings, contributed significantly to its development. Around four centuries ago, Maharaja Marthanda Varma introduced the Udayamarthanda pooja (early morning worship). Over time, the original sandstone structure began to Erode due to exposure to the salty sea breeze. At that time, the temple underwent significant restoration.

The saint-poet **Kumaragurupara Swamigal,** born in Srivaikundam, was blessed by Lord Murugan after years of penance by his parents. Initially he was mute until the age of five, his parents brought him to Tiruchendur and surrendered him at the Lord's feet, contemplating drowning themselves in the sea. Murugan appeared before them, asked Kumaragurupara about the flower he held, and miraculously bestowed speech upon him. Kumaragurupara composed the **244-verse hymn *Kandar Kalivenba*,** which praises Murugan and explains **Saiva Siddhanta**

Principles. Reciting these verses with devotion is said to prevent evil, bestow blessings, and improve speech in children.

The temple offers holy ash (*vibhuti*) mixed with *panneer* leaves as sacred prasadam. The saint-poet Desikamurthi Swamigal facilitated the temple's gopuram and prakaram works using donations collected through this holy prasadam. The significance of the sacred ash was also emphasized by Adi Shankara, who was cured of stomach ailments here and composed the ***Subramanya Bhujangam*** in gratitude.

◆◆◆

Mythological Background

In ancient times, two groups of sages—**Devas** (celestial beings) and **Asuras** (demons)—coexisted. The Asuras, led by the mighty **Surapadman,** tormented the Devas. Surapadman had gained immense power through rigorous penance to Lord Shiva, and the Devas petitioned Shiva to help them. Accepting their plea, Shiva created Murugan from **six sparks** that emerged from his **third eye.** These sparks were nurtured by the **six Karthigai maidens,** and Murugan grew up to become a **divine warrior.**

At Shiva's command, Murugan descended to Tiruchendur, the site of his holy abode, to vanquish Surapadman. Upon reaching Tiruchendur, Murugan encountered **Jupiter** (*Guru Brihaspati*), who was in deep penance seeking his blessings. After granting him grace, Murugan stayed at Tiruchendur with his army and strategized Surapadman's defeat. Murugan sent **Veerabahu,** one of his nine commanders, as an envoy to offer peace, but Surapadman rejected the truce. Ultimately, Murugan waged war,

destroying Surapadman's arrogance and transforming him into a peacock and rooster, symbols of the deity.

Following the victory, Jupiter requested Murugan to remain at Tiruchendur, and **Viswakarma,** the celestial architect, constructed the temple. For this triumph, Murugan earned the title ***Jayanthinathar*** (Lord of Victory), and Tiruchendur was initially known as **Jayantipuram,** later evolving to its current name.

◆◆◆

Architectural Splendor and Worship Practices

The Tiruchendur temple is constructed based on the ***Pranava*** (OM) and adheres to Vastu Shastra principles. It spans 300 feet north-south and 214 feet east-west. The gopuram stands 137 feet tall, with a base measuring 90 feet in length and 65 feet in width. The clock tower is located on the ninth tier of the gopuram.

The primary deity (*Moolavar*) is depicted in a meditative posture, with no spear or consort beside him. He faces east and is worshipped according to the **Kumara Tantra,** while the Shanmuga deity follows **Saiva Agama rituals.** Before worshipping the main deity, **Veerabahu,** the **guardian deity,** is first offered prayers, a unique tradition called ***Pittu Vazhipadu.***

The Sanctum Sanctorium houses eight Shiva lingams—five behind the sanctum and three inside. These lingams represent the five elements and the Sun, Moon, and life itself. It is believed that Murugan himself worships these lingams, making devotees pray to them mentally rather than physically.

◆◆◆

.Sacred Offerings and Rituals

The temple's offerings to the main deity exclude spices and tamarind, while offerings to Shanmuga include them. Items like lentil porridge, dosa, honey curls, *adhirasam*, *appam*, and millet flour are offered. During the Udayamarthanda pooja, dosa and lentil porridge are served, and milk, dry ginger, and hot water are offered during evening worship.

A unique ritual involves slowly pouring milk over the deity's head for three hours in a ceremony called *Dharabhishekam*. Nightly, at around 9:45 PM, a *Deepa Aradhana* (lamp worship) is performed in secret, followed by offerings to the six-faced deity.

Adi Shankara's Connection and Divine Grace

Tiruchendur has inspired countless sages and saints, including **Adi Shankara.** Afflicted by **leprosy** due to a curse, Shiva appeared in his dream and advised him to worship **Lord Senthilkumaran** at **Tiruchendur.** Upon reaching the temple, Shankara composed the ***Subramanya Bhujangam*,** consisting of **33 Sanskrit verses,** in gratitude. The hymn extols the glory, transcendence, and omnipresence of Murugan, emphasizing his ability to reside both in nature and within the devotee's heart.

Historic and Legendary Significance

The temple's flagstaff originates from a sacred sandalwood tree that drifted ashore after the **King of Kandy** dreamt of Lord Murugan instructing him to cut and release it into the sea. A devout worker named **Vendrimala** known for his piety, composed an **899-verse** Tamil rendition of the temple's history after divine intervention. Though initially rejected, his work gained prominence and remains preserved in the temple archives.

This comprehensive translation covers the temple's historical, mythological, and cultural significance, highlighting its uniqueness and spiritual essence.

The Meaning of 'Bhujangam' and Its Literary Significance

Bhujangam means

The word "**Bhujangam**" refers to "a snake that moves with its shoulders," emphasizing the unique movement and curvature of a snake.

In Sanskrit Literature

In Sanskrit, "**Bhujangam**" denotes a specific poetic structure or meter (similar to Tamil prosody like *venpa* or other rhythmic patterns).

The Nature and Structure of Bhujangam Kavya

The words in **Bhujangam** poetry are arranged in a way that resembles the winding and curving motion of a snake.

The Reason Behind the Name 'Bhujangam'

Since the arrangement and structure of Pujanga poetry resemble the snake's curving motion, this poetic form was aptly named "**Bhujangam**."

This form not only serves as a literary technique but also artistically reflects the natural movements observed in a snake, blending nature and poetry seamlessly.

"Subramanya Bhujangam"

"Subramanya Bhujangam" is a magnificent hymn composed by the revered philosopher and saint **Adi Shankara,** dedicated to **Lord Subramanya** (Murugan). This work stands as a timeless masterpiece in the realm of devotional literature, blending profound spirituality, poetic elegance, and philosophical depth.

Origin and Purpose

The composition originated during a pivotal moment in Adi Shankara's life when he visited the sacred shrine of Tiruchendur, one of the six holy abodes of Lord Murugan. Stricken with leprosy due to a curse, Shankara sought divine intervention. In a dream, Lord Shiva instructed him to visit Lord Senthilkumaran (Murugan) at Tiruchendur. Inspired by divine grace, Shankara composed the **"Subramanya Bhujangam"**, a hymn of 33 Sanskrit verses, glorifying Lord Murugan's attributes, transcendence, and omnipresence.

The hymn not only cured Adi Shankara of his ailment but also became a spiritual guide for countless devotees, emphasizing Murugan's ability to cleanse sins, bestow blessings, and offer solace to the troubled.

சமஸ்கிருதம்

1. விக்னேஸ்வர ஆராதனை

சதா பாலரூபாபி விக்னாத்ரிஹந்த்ரீ
மஹாதந்தி வக்த்ராபி பஞ்சாஸ்யமான்யா
விதீந்த்ராதிம்ருக்யா கணேசாபிதாமே
விதத்தாம் ச்ரியம் காபி கல்யாண மூர்த்தி

தமிழ்

1. விநாயகர் வணக்கம்

என்றும் பாலக வடிவனே! எதிர்வரும் வினை மலை தகர்ப்பவனே!
ஆனை முகமே என்றாலும் சிம்மமும் நினையே வணங்குதய்யா!
தேடும் பிரமாதி தேவர்க்கும் தந்தையாய் அருளிய கணேசனே!-உனை
நாடும் எனக்கும் விழுச்செல்வம் நல்குவாய் மங்கள நாயகனே!

ஆங்கிலம்

1. Praise for Lord Ganesha

O Lord, in childlike form you shine,
Destroyer of obstacles, so divine,
With lion's might and face so bright,
You guide us through the darkest night.
The gods themselves bow at your feet,
Father of grace, so kind, so sweet.
Bestow on me your wealth and light,
Lord of auspiciousness, pure and bright.

சதா - எப்பொழுதும், **பாலரூபாபி** - குழந்தை வடிவாகவே இருந்தாலும், **விக்னாத்ரிஹந்த்ரீ** - (வினையாகிய மலை) தடையாகிய மலையைப் பொடிப்பொடியாகச் செய்யும் சக்தி

உள்ளவர். **மஹாதந்தி வக்தராபி** - யானை முகத்தை உடையவரே! **பஞ்சாஸ்யமான்யா** - சிம்மங்களாலும் பூசை செய்ய தகுந்தவராயும், **விதிந்த்ராதிம்ருக்யா** - பிரம்மன் முதலான தேவர்களாலும் தங்கள் விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகத் தேடத் தகுந்தவர். **கணேசபிதா** - கணேசன் என்ற பெயரை உடைய தந்தையாகவும் இருப்பவர். **மே-** எனக்கு **விதத்தாம்** - கொடுக்கட்டும், **ச்ரியம்** - செல்வம். எப்பொழுதும் மங்களகரமான உருவத்துடன் கூடிய பரம மூர்த்தி.

குன்றை அழித்து விளையாடல் யானைக்கு இயல்பு. மேட்டினைக் கண்டால் கொம்பாலும் காலாலும் அதனைச் சிதைத்து விளையாடுதல் யானையின் இயல்பு.

விநாயகப் பெருமான் எப்பொழுதும் இளமைப் பருவம் உடையவர். நம்முடைய மலை போன்ற தீவினைகளை நாம் அவரை வணங்கிய மாத்திரத்தில் பொடிப்பொடியாக்கி விடுவார். யானை முகனாயினும் சிங்கங்கள் கூட வணங்கி நிற்கும். தேவர்களும் அவரை வணங்கி தங்கள் விருப்பங்களை நிறைவேற்ற வேண்டுவார்கள். அளவற்ற மகிமை உடையவரான கல்யாண மூர்த்தியான அவர் நமக்குச் செல்வத்தைக் கொடுக்க வேண்டும்.

ஆதிசங்கரர் இயற்றிய இந்தச் சுப்ரமணிய புஜங்கத்தின் பலன் பக்தர்களைச் சென்றடைய வேண்டும். அதற்குத் தடையாக இருப்பது வினைகள். வினைகளை நீக்க வல்லவர் விநாயகர் எனவே தனது முதல் பாடலில் விநாயகப் பெருமானை வணங்கி இப்புஜங்கத்தைத் தொடங்குகிறார் ஆதிசங்கரர்.

வினை மலையை அழித்தல் விநாயகராகிய யானை முகருக்கு இயல்பு. மலை நம் கண்களுக்குத் தெரியும். வினை நம் கண்களுக்குத் தெரியாது. அதனை அறிந்து முற்றிலுமாகக் களைந்து பக்தர்களைக் காப்பவர் விநாயகப் பெருமான். இதனை,

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

-மூத்த நாயனார் திருஇரட்டை மணிமாலை - கபில தேவநாயனார்

என்னும் பாடலில் செய்யத் தொடங்கும் செயல் தடையின்றி நடைபெற வழிவகை செய்பவன் விநாயகப் பெருமான். அதனால் தான் யானை முகத்தானை முழுமுதற் கடவுள் என்கின்றனர்.

சமஸ்கிருதம்

2. அவையடக்கம் - முருகன் துதி

ந ஜானாமி சப்தம் ந ஜானாமி சார்த்தம்
ந ஜானாமி பத்யம் ந ஜானாமி கத்யம்
சிதேகா ஷடாஸ்யா ஹ்ருதி த்யோததே மே
முகாந்நிஸ்ஸரந்தே கிரஸ்சாபி சித்ரம்

தமிழ்

2. அவையடக்கம் - முருகன் துதி

சொல்லும் பொருளும் அறியாதான் - அந்தச்
சொல்லின் பொருள்பதம் தெரியாதான் - ஆயின்
என்மனக் குகை உறை ஆறுமுகங்கள் - தந்த
எழில்மிகு சொல்மாலை ஏற்றருள்வாய்

ஆங்கிலம்

2. Praise for Lord Muruga

Words I speak, but meaning's lost,
Unseen by me, their truth's high cost.
Yet in my heart, six-faced you dwell,
A beauty so profound, none can tell.
Grant me wisdom, make it clear,
To understand your grace so near.
Bless me with your divine embrace,
And guide me on the righteous chase.

சப்தம் - ஓசை, **ந ஜானாமி** - அறியாதவன். **சார்த்தம்** - பொருளையும், **ந ஜானாமி** - அறியாதவன். **பத்யம்** - நான்கு வித பதங்களுடன் கூடிய மந்திரங்களையும், **ந ஜானாமி** - அறியாதவன். **கத்யம்**- சூர்ணிகைகளையும் **ஏகா** - ஒரு, **சித்** - ஒளியானது, **'டாஸ்யா** - ஸதி ஆறுமுகங்களுடன் இருக்கும், **த்யோததே**- பிரகாசித்துக் கொண்டு இருக்கிறது. அத- அக்காரணத்தால், **முகாத்** - என்னுடைய முகத்தில் இருந்து, **சித்ரம்** - வாக் விலாசங்களும் (வாக்காகிய சொற்களும்) **நிஸ்ஸரந்தே** - வெளியில் வந்து பிரகாசிக்கின்றன.

முருகப் பெருமானே! உன்னைத் துதிக்க ஓசையையோ, பொருளையோ, நான்கு வித பதங்களுடன் கூடிய மந்திரத்தையோ, உருவங்களையோ அறியாதவன் நான். என்னுடைய மனத்தில் ஆறுமுகங்களுடன் கூடிய ஒரு ஒளி பிரகாசித்துக் கொண்டு இருக்கிறது. அதன் காரணமாக, எனது முகத்தில் இருந்து ஆச்சரியப்படத்தக்க வகையில் வாக்காகிய அமிருதப் பிரவாகம், வெளியில் வந்து பிரகாசிக்கின்றன.

ஆதிசங்கரர் முருகப்பெருமானத் துதிக்க அவருக்கு முன்பு வந்து நிற்கிறார். அவ்வாறு பகவான் வந்து முன் நிற்பது என்பதே சாதனையாகும். இந்தச் செயலை முருகப் பெருமான் பொறுத்துக் கொள்ள வேண்டும் என்று வேண்டுகிறார்.

ஒரு சொல்லின் பொருளை அறிந்து முறையான ஓசையுடன் உச்சரிக்க வேண்டும். பதம் பிரித்து முறையாகப் பொருளை உணருமாறு உச்சரிக்க வேண்டும். ஒவ்வொரு பதத்திற்கும் இவ்வளவு எழுத்துகள் இருக்க வேண்டும் என்ற வரையறை உள்ளது. அந்த எழுத்துகளுக்கும் சரஸ்வம், தீர்க்கம் என்ற வரையறைகள் உள்ளன. இவை எதையும் தான் அறிந்தவனல்லன் என்று அடக்கத்தோடு கூறுகிறார்.

"முருகனே! செந்தில் முதல்வனே! மாயோன்
மருகனே! ஈசன் மகனே! ஒருகை முகன்
தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்." -- (திருமுருகாற்றுப்படை.7)

என்ற பாடலில் முருகனின் சிறப்பையும் பிற கடவுளுக்கும் முருகனுக்கும் உள்ள உறவும் குறித்து நக்கீரர் கூறுகிறார்.

சமஸ்கிருதம்

3. வேதாந்தப் பொருள்

மயூராதிரூடம் மஹாவாக்ய கூடம்
மனோஹாரிதேஹம் மஹச்சித்த கேஹம்
மஹீதேவதேவம் மஹாவேத பாவம்
மஹாதேவ பாலம் பஜே லோகபா லம்

தமிழ்

3. வேதாந்தப் பொருள்

வேதமே மயிலாய் வீற்றிருக்க அதன் விரிவாய் நீயும் மேலிருக்க- உன்
பாதச் சலங்கை பாடிடுமே மன்மதனும் தோற்ற உன் திருமுகத்தை
அந்தணர் போற்றும் தேவதேவா! அழகனே! திருமால் மருகனே!
செந்தளிர் பரமசிவ பாலகனே உனையே தொழுவேன் சிறியேனே!

ஆங்கிலம்

3. The Essence of Vedanta

The Vedas, like a peacock, reign in grace, .
And you, with your divine form, transcend in space.
Your anklets sing with rhythm so sweet,
Even Manmatha (the God of Love) bows at your feet.
The saints and sages revere your face,
O Lord of Lords, adorned with beauty and grace!
O Lord Vishnu, of the sacred hue,
O Lord Shiva's child, pure and true,
I offer my devotion to you,
The one and only, the sacred and new!

மயூராதிருடம் - மயிலை வாகனமாகக் கொண்டிருப்பவரும் **மஹாவாக்ய கூடம்** - நான்கு விதமான சொற்றொடர்களுக்கும் சொருப லட்சியப் பொருளாகவும், **மனோஹாரிதேஹம்** - காண்கின்ற பக்தர்களின் மனதைக் கவரும் அழகிய திருமேனியை உடையவரும், **மஹத்சித்த கேஹம்** - மகான்களின் மனதை வீடாக உடையவரும், **மஹீதேவதேவம்** - சான்றோர்கள் அவசியம் தியானம் செய்யத் தகுந்தவரும், **மஹாவேத பாவம்** - நான்கு வேதங்களுடைய நோக்கத்திற்கு உரிய பொருளாக இருப்பவரும், **மஹாதேவ பாலம்** - சிவபெருமானின் திருக்குமரனான முருகக் கடவுளை, **லோகபாலம்** - எல்லா உலகத்தையும் ஆட்சி செய்யும் சக்தியுள்ளவரும் ஆகிய **பஜே** - நான் வழிபடுகிறேன்.

மயிலை வாகனமாகக் கொண்டு அதன்மீதேறி அமர்ந்திருப்பவரும், நான்கு விதமான சொற்றொடர்களுக்குப் பொருளாக இருப்பவரும், காணவரும் பக்தர்களுடைய மனதைக் கொள்ளை கொள்ளும் அழகிய திருமேனியைக் கொண்டவரும், மகான்களின் மனதில் குடியிருப்பவரும், சான்றோர்கள் அவசியம்

துதிக்கத் தக்கவர் ஆகவும், நான்கு வேதங்களின் சிறப்பிற்குப் பொருளாகவும், எல்லா உலகத்தையும் ஆட்சி செய்யும் சக்தி படைத்தவரும், மகா தேவனான சிவபெருமானுடைய மகனான முருகக் கடவுளை வழிபாடு செய்கிறேன் என்கிறார் ஆதிசங்கரரர்.

எந்த மந்திரத்தை உச்சரித்தாலும் ”ஓம்” என்று சொன்ன பிறகே தொடர்ந்து மந்திரத்தைக் கூறுவார்கள். ஓம் என்பது பிரணவ மந்திரம். அதன் உருவமாக முருகக் கடவுளே இருக்கின்றார். கந்தபுராணத்தில் சிவன் முருகனிடம் நீயும் நானும் ஒன்று எனக் கூறுவதை,

”நமது சக்தி ஆறுமுகன் அவனும் யாமும்
பேதகமன்றால் நம்போல் பிரிவிலன் யாண்டும் நின்றான்”

(கந்தபுராணம் - *1070*)

எனக் கச்சியப்ப சிவாச்சாரியார் கூறுகிறார்.

சமஸ்கிருதம்

4. துதி சிறப்பு

யதா ஸந்நிதானம் கதாமானவா மே
பவாம் போதிபாரம் கதாஸ்தே ததைவ
இதி வ்யஞ்ஜயன் ஸிந்து தீரேய ஆஸ்தே
தமீடே பவித்ரம் பராசக்தி புத்ரம்

தமிழ்

4. துதி சிறப்பு

பிறவிக்கடலைக் கடப்பதற்கு செந்தில் கரை வந்தால் போதுமென்று
உறவுக் கரத்துடன் வேலேந்தி செந்தூர் கடற்கரை அமைந்தாயோ!
எக்கணம் அக்கரை வந்தாரோ அக்கணமே கரை அடைந்தாரே!
அக்கரை என்மீது கொண்டவனே! ஏற்பாய் இந்த சொல்மாலையே!

ஆங்கிலம்

4. The Praise of Glory

To cross the sea of birth and death,
The shore of Senthil is all that's left.
With the mighty Vel, the weapon of grace,
You bring us to shore from the ocean's embrace.
The moment the shore beckons, you are there,
Guiding us safely with utmost care.
O Lord, who brought me to the shore,
I offer this garland of praise evermore!

யதா - எப்பொழுதும், **ஸந்நிதானம்** - சன்னதியினை, **கதா** - அடைகிறார்களோ, **மானவா** - மனிதர்கள், **மே** - என்னுடைய, பவாம் **போதிபாரம்** - சம்சாரமாகிய பெரிய கடலின்

அக்கரையை, **கதா** - அடைவார்கள், **ஸ்தே** - அந்த மனிதர்கள், **ததைவ** - அப்பொழுதே, **இதி** - என்று **வ்யஞ்ஜயன்** - பிராணிகளுக்கு அருள்புரிந்து கொண்டு, **ஸிந்து தீரே** - சமுத்திரத்தின் கரையில், **ய** - எந்த இறைவன், **ஆஸ்தே** - பூரண சக்தியுடன் விளங்கி வருகிறாரோ, **பவித்ரம்** - பரிசுத்தமானவரும், **பராசக்தி புத்ரம்** - உலகமாதாவான பராசக்தியின் மகனுமான, **தம்** - அந்த முருகக் கடவுளை **ஈடே** - வழிபடுகிறேன்.

என்னுடைய சன்னிதியை அடையும் பக்தர்களைச் சம்சாரமாகிய பெரிய கடலின் அக்கரையை அடையுமாறு செய்வேன் என்று, கடலின் கரையில் இருந்து கொண்டு உயிர்களுக்கு அருள்புரிந்து வரும், மாசற்றவரான, பராசக்தியின் மைந்தரான அந்தச் சுப்பிரமணியக் கடவுளைத் வணங்குகிறேன். இதனை,

எந் தாயும் எனக்கு அருள் தந்தையும் நீ
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனையாள்
கந்தா, கதிர் வேலவனே, உமையாள்
மைந்தா, குமரா, மறை நாயகனே. (கந்தர் அநுபூதி.47)

அருணகிரிநாதர் கந்தர் அநுபூதி பாடல் புலப்படுத்துகிறது.

சமஸ்கிருதம்

5. அனைத்து நோய் நீங்குதல்

யதாப்தேஸ்தரங்கா லயம் யாந்தி துங்கா
ததைவாபத ஸந்நிதௌ ஸேவதாம் மே
இதீவோர்மிபங்தீர் ந்ருணாம் தர்சயந்தம்
ஸதா பாவயே ஹ்ருத்ஸரோஜே குஹம் தம்

தமிழ்

5. அனைத்து நோய் நீங்குதல்

இதயக்கோவிலில் அமர்ந்துள்ள எந்தை குகனை தியானிக்க
உதயமாயிடும் நம்வாழ்வு உன்னதம் தருவான் அறுமுகனே
அடுக்கடுக்காய் வரும் கடலலைகள் செந்தூர் கரையில் அழிவதுபோல்
அடுக்கிய கோடி வேதனைகள் அழிந்து ஆனந்தம் தவழ்ந்திடுமே!

ஆங்கிலம்

5. The Healing of All Diseases

In the temple of the heart, where the Lord resides,
Meditating on Him, our soul abides.
As dawn rises, our lives will shine,,
Granting us blessings so pure, divine.
Like waves crashing on the shore,
All pains will fade, torment no more.
The endless sorrows will cease to be,
And joy will flow eternally.

யதா - எப்படி, **துங்கா** - உயர்ந்த, **அப்தேஸ்ரங்கா** - கடலலைகள், **லயம்** - அழிவை, **யாத்தி** - அடைகின்றனவோ, **ததைவ** - அதுபோலவே, **மே** - என்னை, **ஸேவதாம்** - தரிசிக்கும் பக்தர்களுடைய, **ஆபத** - எல்லாவிதமான ஆபத்துக்களும்.

ஸன்னிதௌ - என் சன்னதியில், **லயம்**- அழிவை, **யாத்தி** - அடையும், **இதி** - என்று, **ஊர்மிபங்க்தீ** - அலைகளின் வரிசைகளை, **தர்சயந்தமிவ** - காட்டுவது போல் இருக்கின்ற, **தம்** - புகழ் பெற்ற, **குஹம்** - மனக் குகையில் வாசம் செய்யும் கந்தக் கடவுளை, **ஸதா** - எப்பொழுதும், **ஹ்ருத்ஸரோஜே** - இதயத்தாமரையில் நிறுத்திப், **பாவயே** - தியானம் செய்கிறேன்.

கடலிலிருந்து எழும் அலைகள் உயர்ந்து வந்து பின்னர் அழிந்துவிடும். அதுபோல் என்னைத் தரிசிக்கும் பக்தர்களுக்கு எல்லா விதமான துன்பங்களும் என் சன்னதிக்கு வந்தால் அழிந்துவிடும் என்று, வரிசையாக வரும் அலைகளைக் காட்டி உபதேசம் செய்வது போல், இருக்கின்ற மனமாகிய குகையில் வசிக்கும் கந்தக் கடவுளை, என் மனதில் எப்பொழுதும் வைத்துத் தியானம் செய்கிறேன்.

கடல் அலைகள் மேலெழுந்து வரும் ஆனால் அவை மறைந்துவிடும். மீண்டும் புதிய அலைகள் தோன்றும் அவையும் அழிந்துவிடும். இதுஒரு தொடர் நிகழ்ச்சியாகும். அதுபோல முருகனின் சன்னதியில் தியானிக்கும் பக்தர்களின் பாவங்களும் அழிந்துவிடும். மக்களிடம் இறை நம்பிக்கை என்பது அவசியம் இதனைத் திருமூலர்,

“மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை”

என்று திருமந்திரத்தில் குறிப்பிடுகின்றார். இதே கருத்தை, ‘கடவுளை நம்பினோர் கைவிடப்படார்’என்ற பழமொழி எடுத்துரைக்கின்றது. முழுமையாக எவன் ஒருவன் கடவுளிடம் தன்னை ஒப்படைக்கின்றானோ அவனே இறைவனால் காப்பாற்றப் படுகின்றான். கடவுள் தன்னை நம்புபவரை ஒரு நாளும் கைவிடுவதில்லை. மேலும் முருகனைக் கண்ணாரக் கண்டு தரிசித்தால் அனைத்து நோயும் நீங்கும் என்பதை,

ஓதம் பெறுகடல் மோதுந் திரையது
போலும் பிறவியி ...... லுழலாதே
ஓதும் பலஅடி யாருங் கதிபெற
யானுன் கழலிணை ...... பெறுவேனோ
கீதம் புகழிசை நாதங் கனிவொடு
வேதங் கிளர்தர ...... மொழிவார்தம்
கேடின் பெருவலி மாளும் படியவ
ரோடுங் கெழுமுத ...... லுடையோனே

என்னும் பாடலில் திருச்செந்தூர் சென்று கந்தனைத் தரிசித்தால் தொழுநோய், ரோகம், பேய், பிசாசு முதலியவற்றால் வரும் கெடுதல்கள் ஆகிய ஆபத்துகள் நீங்கும் என்று அருணகிரிநாதர் கூறுகிறார்.

சமஸ்கிருதம்

6. சரவணபவ மந்திரம்

கிரௌ மந்நிவாஸே நரா யேஸ்தி ரூடா
ததா பர்வதே ராஜதே தேஸ்தி ரூடா
இதீவ ப்ருவன் கந்தசைலாதி ரூடா
ஸதேவோ முதேமே ஸதா ஷண்முகோஸ்து

தமிழ்

6. சரவணபவ மந்திரம்

சுப்ரமணியன் வசிக்கின்ற செந்தூர் பர்வத மலைவந்தால் - அவன்
அப்பன் வசிக்கும் கைலாயம் ஏகிய பலனெல்லாம் கிடைத்திடுமே
என்றே சொல்வர் அடியார்கள் அதனால் முனிவரும் தவம் செய்வர்
- உயிர்க்கு
அருளிடும் மந்திரமே சரவணபவ நாளும் சொல்லி வணங்குவனே!

ஆங்கிலம்

6. Saravana Bhava Mantra

Where the Father dwells, Kailasa's grace,
Your abode, the mountain's sacred place.
A river flows, with beauty untold,
Six faces bestow blessings, so bold.
In the mantra of Saravana Bhava, pure,
Blessings will come, steadfast and sure.

யேநரா - எந்த மனிதர்கள், **மந்நிவாஸே** - எனது இருப்பிடமாகிய, **கிரௌ** - இந்த மலையில், **அதிருடா** - ஏறியவர்களாகிய, **பவந்தி** - ஆவார்களோ, **தே** - அவர்கள், **ததா** - அப்பொழுதே, **ராஜதே** - வெள்ளிமயமான, **பர்வதே** - கைலாயத்தில், **அதிருடா** - ஏறிவாசம் செய்பவர்களாக, **பவந்தி** - ஆகிறார்கள், **இதி** - என்று, ப்ருவந்நிவ - உச்சியில் இருக்கின்ற, **ஸ** - அந்த, **சண்முக** - ஆறுமுகங்களுடன் காட்சி தரும், **தேவ** - கந்தக் கடவுளானவர், **மே** - என்னுடைய, **முதே** - மகிழ்ச்சிக்கான, **அஸ்து** - இருக்கட்டும்.

எனது இருப்பிடமான கந்தமான மலையை அடைந்த மனிதர்கள் அப்பொழுதே கயிலை மலையில் ஏறி வாசம் செய்வார்கள் என்று கூறுவது போல் ஆறுமுகங்களுடன் கந்தமான மலையில் காட்சிதரும் சுப்ரமணியன் என்னுடைய மகிழ்ச்சிக்காக அங்கேயே இருக்கட்டும்.

"குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்குமிடம்" குறிஞ்சிக் கடவுளான முருகனே மலைகளின் மீது ஆட்சி செய்கிறார். தெய்வங்களில் உயர்ந்தவராகத் திகழ்வதால் இவரைத் தெய்வசிகாமணி எனப் போற்றுவர்.

"கந்தனைக் கரம் குவித்து வணங்குவோருக்குக் கலியின் கொடுமையும் கால பயமும் கிடையாது" என்று வடமொழி ஸ்காந்தம் குறிப்பிடுகின்றது.

சமஸ்கிருதம்

7. குகக்காட்சி நன்மை

மஹாம்போதி தீரே மஹாபாபசோரே
முனீந்த்ரானுகூலே ஸுகந்தாக்யசைலே
குஹாயாம் வஸந்தம் ஸ்வபாஸா லஸந்தம்
ஜனார்திம் ஹரந்தம் ச்ரயாமோ குஹம்தம்

தமிழ்

7. குகக்காட்சி நன்மை

திருச்செந்தூரின் கடற்கரையில் திகழும் மலையின் நாயகனே!
திருமிகு முனிவர்கள் தவம்செய்ய ஒளிமிகு குகை பாவம் தீர்த்திடுதே!
ஒரு கோடி ஞாயிறு ஒளி மிஞ்சும் உன்முகங்கள் ஒன்றாய் சேர்ந்திடவே
திருக்கூடி இருள் நோய்கள் ஓட்டிடுதே எங்கள் நாயக அருளொளியே!

ஆங்கிலம்

7. The Benefit of Gugan Darshan

O Lord, the leader of the mountain on the shore,
In Thiruchendhur, you shine evermore!
The sage's penance, in light-filled caves,
Cleanses sins, and the soul it saves.
A million suns cannot compare,
To the radiance of your face so rare.
Together, in light, our spirits unite,
And darkness, disease, takes flight-
By the grace of our Lord, all wrongs are made right.

மஹாம்போதிதீரே - மஹாததி என்ற கடற்கரையில் விளங்குவதும், **மஹாபாசோரே** - ஐம்பெருங் குற்றங்களை நாசம் செய்வதும், **முந்நீத்ரானுகூலே** - முனிவர்கள் தவம் செய்வதற்கு ஏற்றதும், **ஸுகந்தாக்யசையிலே** - சுகந்த மலையில், **குஹாயாம்** - குகைக்குள், **வஸந்தம்** - வாசம் செய்கிறவனும், **ஸ்வபாஸா** - தனது ஜோதி போன்ற ஒளியால், **லஸந்தம்** - விளங்குபவனும், **ஜனார்தீம்** - பிராணிகளின் நோய்களை, **ஹரந்தம்** - நீக்குபவனும், **தம்குஹம்** - அந்தக் குகனை, **ச்ரயாம** - வணங்குகிறேன்.

திருச்செந்தூர் கடற்கரையில் விளங்குவதும் ஐம்பெரும் தீச்செய்களை (கொலை, களவு, மது, பிறன்மனை நயத்தல், குரு நிந்தனை) அழிப்பதும், முனிவர்கள் தவம் செய்ய ஏற்றதுமாகிய கந்த மலை விளங்குகிறது. அந்த மலையில் உள்ள குகைக்குள் எழுந்தருளி இருக்கும் குகனாகிய சுப்ரமணியப் பெருமான் உயிர்களின் நோய்களைத் தீர்க்கிறார். அப்படிப்பட்ட அந்தக் குகனை நான் வணங்குகிறேன் என்கிறார் ஆதிசங்கரர்.

திருச்செந்தூர் கடற்கரையில் ஒரு அழகான குகை ஒன்று உள்ளது. அதிலுள்ள குகையில் குகன் வாசம் செய்கிறார். அந்த மலையில் பலவிதமான மூலிகைகள், அருவி, மரங்கள், மலர்கள் என்று வளங்கள் உள்ளன. அந்த மலை முனிவர்கள் தவம் செய்வதற்கு ஏற்றதாக உள்ளது.

திருச்செந்தூர் கோவிலும் மலையுடன் தொடர்புடைய குடவரை கோவில் தான். சந்தன மலை மீது தான் இந்த கோவில் அமர்ந்துள்ளது. சந்தன மலை இருந்ததற்கான அடையாளமாக தான் வள்ளி குகை அருகே இப்போதும் சந்தனமலை பாறைகளாக உள்ளன. திருச்செந்தூரும் குடவரை கோவில் என்பதற்கு சான்றாக, கோவில் பிரகாரத்தில் பெருமாள் சந்நிதி குடவரை சந்நிதியாக உள்ளது. இங்கு பள்ளிகொண்ட கோலத்தில் பெருமாள் காட்சி தருகிறார். கடற்கரையில் இருந்த மலையில் கோவில் அமைக்கப்பட்டு, பிறகு விரிவாக்க பணிகளுக்காக பாறைகள் உடைக்கப்பட்டு, அப்புறப்படுத்தி இருக்கலாம் என சொல்லப்படுகிறது. சூரபத்மனுடன் போர் புரிவதற்கு முன்பும், பிறகும் முருகன் தனது படைகளுடன் தங்கி

இருந்த இடம் என்பதாலும், சூரபத்மனை வதம் செய்து மயிலாகவும், சேவலாகவும் ஆட்கொண்ட தலம் என்பதற்கு அடையாளமாக முருகன் தங்கிய இடத்திலும், சூரனை ஆட்கொண்ட இடத்திலும் முருகன் கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளது.

சமஸ்கிருதம்

8. பள்ளியறைக் காட்சி

லஸத்ஸ்வர்ணகேஹே ந்ருணாம் காமதோஹே
ஸுமஸ்தோம ஸஞ்ச்சன்ன மாணிக்ய மஞ்சே
ஸமுத்யஸ் ஸஹஸ்ரார்க துல்ய ப்ரகாசம்
ஸதாபாவயே கார்த்திகேயம் சுரேசம்

தமிழ்

8. பள்ளியறைக் காட்சி

தங்கமயமான பள்ளியறை நறுமணம் நிறைந்த பள்ளியறை
அங்கமெல்லாம் ஒளிவீச அமர்ந்தாய் மாணிக்கக் கட்டிலிலே!
ஆழகிய கார்த்திகை அன்னைகளோ அருகே அமர்ந்து தாலாட்ட!
அழகிய உந்தன் திருவடியோ கருணையுடன் எமைப்
பார்க்குதய்யா!

ஆங்கிலம்

8. The Vision of the Sacred Hall

A golden hall with fragrance so sweet,
Where light shines bright at your feet.
On the jeweled bed, you rest serene,
While the lovely Goddesses Karthikai are seen.
They sit beside you, gentle and kind,

Lulling you with a lullaby, divine.
Your compassionate gaze, a loving sight,
Brings solace and peace, shining bright.

லஸத்ஸ்வர்ணகேஹே - ஒளி வீசும் தங்கமயமான கருவறையில், **ந்ருணாம்** - மனிதர்களுக்கு, **காமதோஹே** - அனைத்து விருப்பங்களையும் நிறைவு செய்பவராய் இருக்கின்ற, ஸுமஸ்தோமஸஞ் சன்னமாணிக்ய **மஞ்சே** - நறுமணமுள்ள மலர்களால் நாலாபுறமும் மறைத்துக் கட்டப்பட்ட மாணிக்கத்தால் செய்யப்பட்ட கட்டிலில், **ஸமுத்யத்ஸஹஸ்ரார்கதுல்யப்ராகசம்** - உதிக்கின்ற ஆயிரம் சூரியர்களுடைய ஒளிக்கு இணையாக பிரகாசிப்பவனாகவும், **"கார்த்திகேய"** - கிருத்திகா நட்சத்திரத் தேவதைகளும், தங்களுடைய மகன் என்ற உரிமையில் திருப்தி செய்து வைத்த சுப்ரமணியப் பெருமானை, **ஸதா** - எப்பொழுதும், **பாவயே** - தியானம் செய்கிறேன்.

மனிதர்களின் சகல விருப்பங்களையும், நிறைவேற்றி வைக்கின்ற சுப்ரமணியப் பெருமான் தங்கமயமான பள்ளியறையில், நறுமண மலர்களால் எல்லாப் புறங்களிலும் அலங்கரிக்கப்பட்ட மாணிக்கக் கட்டிலில், ஆயிரம் சூரியர்களது ஒளிபோல பிரகாசத்துடன் காட்சியளிக்கிறார். தேவர்களுக்கு ஈசனான அவரை கிருத்திகை நட்சத்திர தேவதைகளும் தரிசிக்க உள்ளே சென்று பணிவிடைகளைச் செய்கிறார்கள். அப்படிப்பட்ட சுப்ரமணியக் கடவுளை எப்பொழுதும் தியானிக்கிறேன் என்கிறார் ஆசிரியர்.

முருகனின் உருவம் ஆயிரம் சூரியனை ஒத்துள்ளதை,

"உலகம் உவப்ப வலனேர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடல்கண் டாஅங்கு"

(திருமுருகாற்றுப்படை *1-2*)

என்னும் அடிகளில் நக்கீரர் கூறுகிறார்.

சமஸ்கிருதம்

9. திருப்பாத வர்ணனை

ரணத்தம்ஸகே மஞ்சுளேத்யந்த சோணே
மனோஹாரி லாவண்ய பீயூஷபூர்ணே
மனஷ்ஷட்பதோ மே பவக்லேசதப்த
ஸதா மோததாம் ஸ்கந்த தே பாதபத்மே

தமிழ்

9. திருப்பாத வர்ணனை

அன்னப்பறவை பாடிடவே அழகாய் ஆடிடும்நின் சேவடியே!
அமுதம் சுமந்த தாமரைபோல் அழகுடன் விளங்கும் சேவடியே
தேனை நாடும் வண்டினைப்போல் எந்தன் மனமும் ஆடுதைய்யா!
ஊனை உருக்கும் தவம்செய்ய செந்தாள்தனை எனக்குத் தந்தருளே!

ஆங்கிலம்

9. Description of the Divine Feet

The bird of nectar sings so sweet,
Dancing gracefully at your feet!
Like a lotus carrying ambrosial light,
Your divine feet shine pure and bright.
My heart dances, like a bee to the sweet,
Desiring the honey from your feet.
By the grace of your holy steps, I'm blessed,
And in your service, I find my rest.

ரணத்தம்ஸகே - இனிய ஓசையை எழுப்பிக் கொண்டிருக்கும் அன்னப்பறவைகள் இருக்கும் இடமாகவும் **அத்யந்தசோணோ** - மிகவும் சிவப்பு நிறமுள்ளதாயும், **மனோஹாரி லாவண்ய பீயூஷபூர்ணே** - மனதை அபகரிக்கின்ற அழகு என்ற அமுதம்

நிறைந்ததாகவும், **மஞ்சுளே** - அழகாகவும் உள்ள, **தே** - உன்னுடைய, **பாதபத்மே** - பாதங்களாகிய தாமரை மலர்களில், **பவக்லேசதப்த** - சம்சார தாபத்தால் தவிக்கும், **மே** - என்னுடைய, **மனஷ் ஷட்பத** - மனமாகிய வண்டானது, **ஹே ஸ்கந்த** - சுப்பிரமணிய மூர்த்தியே! **ஸதா** - எப்பொழுதும், **மோததாம்** - உலாவும் காரணத்தால் மகிழ்ச்சி அடையட்டும்.

அன்னப் பறவைகள் இனிய ஓசையை எழுப்பிக் கொண்டு, சிவப்பு நிறமானதும் அழகானதும் ஆகிய உனது பாதங்களில் வசிக்கின்றன. சம்சார பந்தத்தில் அகப்பட்டுத் தவிக்கும் என் மனம் என்ற வண்டானது உன் பாதங்களில் உலாவுவதால் எப்பொழுதம் மகிழ்ச்சியை அடைய வேண்டும்.

கந்தனின் திருப்பாதங்கள் சிவப்பு நிறத்துடன் காட்சி தருகின்றன. எனவே, ஆதிசங்கரர் முருகனின் பாதங்களைச் செந்தாமரை மலர்களுடன் ஒப்பிடுகிறார். சிவப்பு நிறமான செந்தாமரை மலர்களில் அன்னப் பறவைகள் கூடுகின்றன. அதுபோல் முருகனின் பாதங்களில் முனிவர்கள் கூடுகிறார்கள் என்று கூறுகிறார். எனவே முருகனின் பாதங்களைத் தொழுதால் முனிவர்களும் யோகிகளும் உச்சரிக்கும் பிரணவ மந்திரமும் வேத ஒலிகளும் காதில் கேட்கலாம்.

தாமரை புரையும் காமர் சேவடி
பவழத்தன்ன மேனித் திகழ் ஒளிக்
குன்றி ஏய்க்கும் உடுக்கைக் குன்றின்
நெஞ்சு பக எறிந்த அம்சுடர் நெடுவேல்
சேவலங் கொடியோன் காப்ப
ஏமம் வைகல் எய்தின்றால் உலகே!

(குறுந்தொகை.கடவுள் வாழ்த்து)

கமலமெனச் சிவந்த திருப்பாதங்களும், பவழம்போல் சிவந்தமேனியும் குன்றிமணி போல் சிவந்த நிறத்தில் ஒளிரும் ஆடையும் கிரௌஞ்சத்தைப் பிளந்த நெடுவேலும் சேவல்

கொடியும் கொண்ட முருகவேள் இவ்வுலகினைக் காப்பதால் உயிர்கள் இன்பம் அடைகின்றன..

சமஸ்கிருதம்

10. இடை வர்ணனை

ஸுவர்ணாபதிவ்யாம்பரைர் பாஸமானாம்
க்வணத்கிங்கிணீ மேகலா சோபமானாம்
லஸத்தேம பட்டேன வித்யோதமானாம்
கடிம் பாவயே ஸ்கந்த தே தீப்ய மானாம்

தமிழ்

10. இடை வர்ணனை

மணிகள் இடையில் பாட்டிசைக்கும் அதனுடன்
ஆடிஅசைந்தனவே
அணிகலன் அனைத்தும் ஆசைதரும் மின்னும் தங்க நிறத்துடனே
தவழும் ஆடை மனமகிழ்வுதரும் ஆனால் ஒளிரும் மின்னலைப் போல்
ஒளிரும் பவள இடையில்மட்டும் என்றும் என்மனம் நின்றிடுமே!

ஆங்கிலம்

10. Divine Pelvic girdle Description

Amidst the jewels, music flows,
As the dance with rhythm glows.
Adornment sparkles, desires ignite,
A golden hue, a fabric bright.
The heart is filled with blissful delight,
As the shimmering light reflects your might.
Yet, in the coral glow, in the space in between,
My heart belongs to you, my King, serene.

ஹேஸ்கந்த - ஹே சுப்பிரமணியக் கடவுளே, **ஸுவர்ணாபதிவ் யாம்பரை** - தங்க நிறத்துடன் உள்ள ஆடைகளால் **பாஸமானாம்** மறைக்கப்பட்டு விளங்குவதும், **க்வணத்கிங் கிணீமேகலா சோபமாநாம்** - ஒலி எழுப்பிக் கொண்டிருக்கும் சலங்கைகளோடு விளங்குவதாயும், **லஸத்தேம பட்டேந** - ஆடைக்கு மேல் தங்கமயமான பட்டம் ஒன்று அழகாக அமைந்துள்ளதாயும், **தீப்யமானாம்** - எந்தவித அலங்காரமும் இன்றி இயற்கையாகவே ஒளிவீசும் தன்மை உள்ளதாயும் இருக்கின்ற, தீபம் போல் **தே** - உன்னுடைய, **கடிம்** - இடுப்புப் பகுதியை, **பாவயே** - தியானம் செய்கிறேன்.

முருகனின் இடுப்புப் பகுதி தங்க நிற ஆடைகளால் மறைக்கப்பட்டு விளங்குகிறது. அதிலுள்ள சலங்கைகள் ஒலி எழுப்பிக் கொண்டிருக்கின்றன. அதற்கு மேல் தங்கமயமான பட்டம் ஒன்று அளவிட முடியாத ஒளியுடன் இருக்கிறது. எந்தவிதமான அலங்காரமும் இன்றி இடுப்புப் பகுதி இயற்கையாகவே ஒளி வீசுகின்றது. இத்தகைய இடுப்புப் பகுதியைத் தியானம் செய்கிறேன் என்கிறார் ஆசிரியர்.

முருகனின் விஸ்வரூப தரிசனத்தின் போது அவரது இடைப் பகுதி ஆகாயமாக வருணிக்கப்பட்டது. ஆகாயம் எல்லாருக்கும் எல்லாமும் கிடைக்கச் செய்கிறது. அதுபோல் கந்தனின் இடைப்பகுதியும் பக்தர்களுக்கு எல்லா நன்மையும் அளிக்கவல்லது.

சமஸ்கிருதம்

11. மார்பு வர்ணனை

புளிந்தேச கன்யாக நாபோக துங்க
ஸ்தனாலிங்க நாஸக்த காச்மீரராகம்
நமஸ்யாம்யஹம் தாரகாரே தவோர
ஸ்வபக்தாவனே ஸர்வதா ஸானுராகம்

தமிழ்

11. மார்பு வர்ணனை

தாரகா சுரனை வதைத்தவனே சங்கரன் புதல்வா சண்முகனே!
தூரனக தங்கக் குறவள்ளி தங்கவே உந்தன் திருமார்பின்
கொங்கைக் குங்குமத் தடம்பார்த்து விம்மும் என்னைப்பாரப்பா!
என்கைத் தொழுதிடும் ஏனப்பா! உன் இதயம் உள்சிவந்தது
எனக்கப்பா!

ஆங்கிலம்

11. Description of the Chest

O Son of Shankara!, the one who conquered the stars,
O Lord Muruga!, with power beyond Mars!
The golden creeper of the distant shore,
Adorns your chest, with beauty galore.
Like the sacred kumkum on your chest so bright,
My heart spins in wonder, lost in the light.
I bow down, my hands pressed in prayer,
For your heart, O Lord, is pure and rare!

ஹேதாரகாரே - தாராகாசுரனுக்குப் பகைவனான முருகக் கடவுளே!, **புளிந்தேச கந்யாக நாபோகதுங்க ஸ்தனாலிங்கநா ஸக்தகாச்மீரராகம்** - வேடனின் பெண்ணான வள்ளி என்ற

தன் நாயகியின் கடினமானதும் பெரியதாகவும் இருக்கின்ற இரண்டு தனங்களைத் தழுவிக் கொள்ளும் காரணத்தால், அந்தத் தனங்களில் அலங்கரிக்கப்பட்ட குங்குமங்கள் தன்மார்பில் பட்டதால் சிவப்பான வண்ணத்துடனும், **ஸர்வதா** - எப்பொழுதும், **ஸ்வபக்தாவநே** - தன் பக்தர்களுக்கு அருள் புரியும் நிலையில், **ஸாநுராகம்** - நெஞ்சின் உள்ளே ஏற்படும் ஆசையினால், வெளியிலும் சிவந்தது போல் இருப்பதாக உள்ள, **தவ** - உன்னுடைய, **உர** - மார்புப் பகுதியை, **அஹம்** - நான், **நமஸ்யாமி** - வணங்குகிறேன்.

தாரகாசுரனின் பகைவனான முருகக் கடவுள், தான் மணந்த வேடனின் பெண்ணான வள்ளியைத் தழுவிக் கொள்ளும் போது, வள்ளியின் தனங்களில், அழகாக அலங்கரிக்கப்பட்ட குங்குமம், முருகனின் மார்பில் படுகிறது. இதனால் அவரது மார்புப் பகுதி சிவப்பாக மாறிவிடுகிறது. பக்தர்களுக்கு அருள்புரியும் ஆசை காரணமாக, அவரது நெஞ்சின் உள்ளிருந்த சிவப்பு வெளியில் தெரிகிறது. இந்த மார்புப் பகுதியை நான் வணங்குகிறேன் என்கிறார் ஆதிசங்கரர்.

சமஸ்கிருதம்

விதௌக்லுப்த தண்டான் ஸ்வலீலாத்ருதாண்டான்
நிரஸ்தே பசுண்டான் த்விஷத்காலதண்டான்
ஹதேந்த்ராரிஷண்டான் ஜகத்ராண சௌண்டான்
ஸதாதே ப்ரசண்டான் ச்ரயே பாஹுதண்டான்

தமிழ்

12. கரங்களின் வர்ணனை

உந்தன் கரங்கள் பணிரெண்டும் என்றும் எமக்கு அருளிடவே
கந்தன் கரங்கள் பயம்நீக்கும் பக்தரை என்றும் காத்திடுமே
ஆனால் அயன்மால் தேவர்களுக்கோ அவைகள் தருவது அச்சமப்பா!
அபயம் கொண்டு அசுரருமே அஞ்சி நடுங்கி உய்வாரே!

ஆங்கிலம்

12. Description of the Hands

Your hands, O Lord, are always there,
To bless us with mercy and care.
With hands that shield from every fear,
Protecting the devoted, always near.
But for the gods and the divine above,
They bestow fear, not the comfort of love!
Yet your hands bring safety and grace,
To the demon's terror, you offer a place.
By your blessing, the demons quake in dread,
And rise in courage, where fear has fled!

ஹே சண்முகா - ஆறுமுகக் கடவுளே, **விதௌ** - ஞானவான் பிரம்மாவுக்கு, **க்லுப்ததண்டாந்** - விதிக்கப்பட்ட தண்டனையுடன் கூடியதாயும், **ஸ்வலீலாத்ரு தாண்டாந்** - தான் விளையாட்டாகவே அனைத்து அண்டங்களையும் தன்னிடம்

கொண்டதாயும், **நிரஸ்தேபசுண்டாந்** - யானையின் தும்பிக்கையைப் பிடித்து அதன் திமிரை அடக்கியதாகவும், **த்விஷத்காலதண்டாந்** - பகைவனாக மாறும் எமனைத் தண்டிப்பதாயும், **ஹதேந்த்ராரிஷண்டாந்** - இந்திரனுக்குப் பகைவர்களான சூரபத்மன் முதலிய அசுரர்களைக் கொன்றதாகவும், **ஜகத்ராணசௌண்டாந்** -உலகைக் காக்கும் விஷயத்தில் மிகவும் திறமை உள்ளதாகவும், **ப்ரசண்டாந்** - பகைவர்களுக்குப் பயத்தைக் கொடுப்பதாகவும் இருக்கும், **தே** - உன்னுடைய, **பாஹீதண்டாந்** - தண்டாகாரமான பன்னிரண்டு கைகளையும், **ஸதா** - எப்பொழுதும், **ச்ரயே** - நான் வேண்டுறேன்.

சண்முகனின் பன்னிரண்டு கரங்கள் பிரம்மாவுக்கு தண்டனையையும், அண்டங்களைத் தனக்குள் அடக்கியும் யானையின் திமிரை அடக்கியும், எமனை தண்டித்தும், அசுரர்களை வதைத்தும், உலகைக் காத்தும், பகைவருக்குப் பயத்தை உண்டாக்கக் கூடியதாகவும் உள்ளன. அந்தக் கரங்களை எப்பொழுதும் நான் வழிபடுகிறேன் என்கிறார் ஆசிரியர்.

தேவர்களுக்குத் தொல்லை கொடுத்து வந்த சூரபத்பன், தாராகசூரன், சிங்கமுகன் போன்ற அசுரர்களை முருகன் வதம் செய்தான். அவனின் புஜபல பராக்கிரமங்கள் பகைவரால் அடையமுடியாதவை. எனவே பகைவரை வென்று உலகைக் காத்த முருகன் அடியவர்களுக்குப் பயத்தை நீக்கி அருள்புரிவான்.

சமஸ்கிருதம்

13. உவமையில்லா ஆறுமுகங்கள்

ஸதா சாரதா ஷண்ம்ருகாங்கா யதி ஸ்யு
ஸமுத்யந்த ஏவ ஸ்திதாச்சேத் ஸமந்தாத்
ஸதா பூர்ணபிம்பா கலங்கைஸ்ச ஹீனா
ததா த்வன்முகானாம் ப்ருவே ஸ்கந்த ஸாம்யம்

தமிழ்

13. உவமையில்லை உன் முக அழகுக்கு!

செந்தூரமிட்ட உன் முகமோ களங்கமுள்ள நிலவினை நினைவூட்டும்
செந்தூரமில்லா நேரங்களில் கரையில்லாத முழுநிலவோ!
ஆறுமுகங்கள் எந்நாளும் அழகாய் திகழும் என்நினைவில்
ஆறுதல் தரும் நிலவொளியை உன் திருமுகஒளி என்றும் மிஞ்சிடுதே!

ஆங்கிலம்

13. The Beauty of Your Face

Your face a radiant glow so bright,
Like the moon's soft gleam in the silent night.
In times when beauty fades away,
Your grace, like the moon, lights my darkened day.
Six faces of beauty once did shine,
In memory's glow, they intertwine.
Yet none can outshine, in pure delight,
The glow of your face, my guiding light.

ஸதா - எப்பொழுதும், **சாரதா** - சரத்காலத்தில் (இலையுதிர் காலம்) உள்ள தாயும், **ஷண்ம்ருகாங்கா** - ஆறுவிதமான களங்கத்தோடு காணப்படும், **பூர்ணபிம்பா** - பரிபூர்ணமான சந்திரமண்டலங்கள், **ஸமந்தாத்** - நாலாபக்கங்களிலும், **ஸதா** - எப்பொழுதும், **ஸமுத்யந்த ஏவ** - ஒளி வீசிக் கொண்டு

இருப்பதுடன்கூட, **யதிஸ்யு** - இருக்குமேயானால், **ததா** - அப்பொழுது, **த்வந்முகாநாம்** - கஸ்தூரித் திலகத்தால் அழகுபடுத்தப்பட்ட உன் முகங்களுக்கு, **ஸாம்யம்** - உபமானத்தைக் கூறுவேன்.

சந்திர மண்டலத்தில் உள்ள சந்திரன் ஆறுவிதமாக அமைந்து களங்கத்துடன் இருந்தால், திலகமிட்டுள்ள உன்னுடைய ஆறுமுகங்களுக்கு உவமை கூறுவேன். சந்திரன் களங்கமில்லாமல் இருந்தால், திலகமில்லா நிலையில் உன் முகங்களுக்கு உவமை கூறுவேன்.

சமஸ்கிருதம்

14. முக அழகு வர்ணணை

ஸ்புரன் மந்தஹாஸை ஸஹம்ஸானி சஞ்சத்
கடாக்ஷாவலீப்ருங்க ஸங்கோ ஜ்வலானி
ஸுதாஸ்யந்தி பிம்பா தராணீச ஸூனோ
தவாலோகயே ஷண்முகாம் போரு ஹாணி

தமிழ்

14. முக அழகு

ஆறு தாமரை மலர்கள்போல் சிவந்தன உந்தன் ஆறுமுகமே!
ஆறுதல் தரும் உன்புன்னகை அடுக்கிய முத்தின் ஆரமே!
கூடிய அன்னப் பறவைதனைக் காட்சியாய் கண்டேன் உன்முறுவலில்
தேனோ இதழில் ஊறிடுதே கருவண்டாய் கடைக்கண் திகழுதய்யா!

ஆங்கிலம்

The Grace of Your Smile

Like six red lotuses in bloom,
Your six-fold face lifts all gloom.
Your smile, a pearl's tender grace,
Brings joy that time cannot erase.
Like a bird in flight with wings so grand,
I see your beauty, a sight so grand.
In your voice, like honey's sweet trace,
I find my heart's most cherished place.

ஸ்புரந் மந்தஹஸை - ஒளிவீசும் புன்சிரிப்புகளால், **ஸஹம்ஸாநி** - அன்னப் பறவைகளோடு கூடியிருப்பவைகளாயும், **சஞ்சத் கடாசஷா வலீப்ருங்கஸம் தோஜ்வலாநி** - எப்பொழுதும் கடைக்கண் பார்வையை உடைய கூட்டங்களாகிய வண்டுகளின் வரிசைகளால் ஒளிவீசிக் கொண்டிருப்பவைகளாயும், **ஸுதாஸ்யந்தி பிம்பாதராணி** - அமிர்த ஊற்றைப் பெருக விட்டுக் கொண்டிருக்கும், இதழின் பிம்பங்களுடன் கூடி விளங்குகின்ற, **தவ** - உன்னுடைய, **சண்முகாம் போருஹாணி** - ஆறுமுகங்களாகிய தாமரை மலர்களை, **அவலோகயே** - பார்த்தேன்.

உன்னுடைய புன்சிரிப்பு அன்னப் பறவைகள் கூடியிருப்பதைப் போலவும், உன்னுடைய கடைக்கண் பார்வை தாமரை மலரில் உள்ள தேனை உண்ண வரும் வண்டுகள் போலவும் தோன்றுகின்றன. இதழ்களோடு அமுத ஊற்றைப் பெருகவிட்டுக் கொண்டிருக்கின்றன. இவ்வாறு இருக்கும் உன்னுடைய தாமரை மலர்களாகிய ஆறுமுகங்களைப் பார்த்தேன் என்கிறார்.

சமஸ்கிருதம்

15. கண்களின் அருட்பார்வை மகிமை

விசாலேஷு கர்ணாந்த தீர்க்கேஷ் வஜஸ்ரம்
தயாஸ்யந்திஷு த்வாதசஸ் வீக்ஷணேஷு
மயீஷத் கடாக்ஷ ஸக்ருத் பாதித ஸ்சேத்
பவேத்தே தயாசீல கா நாமஹானி

தமிழ்

15. கண்களின் அருட்பார்வை

காதளவோடிய கண்கள் பணிரெண்டு உடைய உமைபாலகனே!
ஆதரவாய் வந்த ஆறுமுகனே என்றே அழைப்போம் அன்போடு
கடைக்கண் கொண்டு நீ அருளிவிட்டால் நிறைஆயுள் நீள்புகழ் தேடிவரும்
தடைகள் தகர்க்கும் என்பார்கள், அதுவே எனக்குப் போதுமென்பேன்!

ஆங்கிலம்

The Divine Gaze of Your Eyes

In your eyes, a love so divine,
With power and grace, they brightly shine.
Like the moon, with soft, guiding light,
They came as a refuge, my heart's delight.
When you bestow your gaze with care,
Lifes barriers crumble, none compare.
The blessings you give, with love so true,
Are all I need to see me through.

தயாசீல - தயை என்ற நற்குணம் கொண்டவனே, **விசாலேஷு** - பெரியதாகவும், **கர்ணாந்ததீர் கேஷு** - காதுவரை நீண்டு இருப்பதாகவும், **அஜஸ்ரம்** - எப்பொழுதும், **தயாஸ்யந்திஷு**

- கருணையுடன் உள்ளதும், **த்வாதசஸ** - பன்னிரண்டு, **ஈக்ஷணேஷ** - உன் கண்ணுக்குள், **ஈஷத்கடாசஷ** - ஒரு அற்பமான கடைக்கண் பார்வை, **மயி** - என்னிடத்தில், **ஸக்ருத்** - ஒருமுறை, **பாதித** - விழுந்ததாக, **பவேத்சேத்** - ஆகுமானால், **தே** - உனக்கு, **காநாம** - என்ன, **ஹாநி** - குறை, **பவேத்** - உண்டாகும்?

சுப்பிரமணியப் பெருமானின் பன்னிரண்டு கண்கள் பெரிதாக அமைந்துள்ளன. அவை காதுவரை சென்று நீளமானதாகக் காட்சி தருகின்றன. இந்தப் பன்னிரண்டு கண்களில் இருந்து ஒரு சிறிதளவு கடைக்கண் பார்வை என்மீது விழுந்தால் அதனால் உனக்கு என்ன குறைவந்துவிடப் போகிறது?.

சமஸ்கிருதம்

16. மகா வாக்கியங்களும் ஆறுமுகங்களும்

ஸுதாங்கோத் பவோ மேஸி ஜீவேதி ஷட்தா
ஜபன்மந்த்ரமீசோ முதா ஜிக்ரதே யான்
ஜகத்பாரப்ருத்யோ ஜகந்நாத தேப்ய
கிரீடோஜ்வலேப்யோ நமோ மஸ்தகேப்ய

தமிழ்

16. பெரிய வாசகங்களும் ஆறுமுகங்களும்

ஐந்தெழுத்து மந்திரத்தை உயிர்க்கே தந்தான் உன்தந்தை
ஐந்தெழுத்து போதாதென தந்தான் மகனுக்கு மகுடங்களை!
ஆறுதலைத்தரும் உன் ஆறு தலைகள் மகுடம் தாங்கி மிளிருதைய்யா!
ஆறெழுத்து மந்திரமே அடியேன் மனதில் நின்றதைய்யா!

ஆங்கிலம்

The Great Words and Six-Fold Faces

Your father gave you a mantra so pure,
A five-letter prayer, life's heart to secure.
Not enough, he thought, for his son to wear,
So he gifted him crowns beyond compare!
Your wisdom, like jewels, shines on with grace,
Your crown of knowledge lights up your face.
The six-fold mantra lives in my heart,
Guiding me forward, never to part.

ஈச - உன் தந்தையான பரமே'வரன், **ஹேஸ"த** - குழந்தையே, **மே** - என்னுடைய, அங்கோத்பவ - உடம்பிலிருந்து உண்டானவன், **அஸி** - ஆகிறாய், ஜீவ - தீர்காயுளுடன் இருக்க வேண்டும், **இதி** - என்று, ஷட்தர - ஆறுதடவை, **மந்த்ரம் ஜபந்** - மந்திரத்தை ஓதிக் கொண்டு, **யாந்** - எந்தத் தலைகளை, **முதா** - மகிழ்ச்சியுடன், **ஜீரக்தே** - உச்சி முகர்ந்து பார்க்கிறாரோ, **ஜகத்பாரப்ருதப்ய** - உயிர்களின் யோக நல பாரத்தை ஏற்றுக் கொண்டு இருக்கின்றவைகளாகவும், **கிரீடோஜ்ஜ்வலேப்ய** - நவரத்தினங்களால் அலங்கரிக்கப்பட்ட கிரீடங்களால் விளங்குகின்ற, **தேப்ய** - அந்த, **மஸ்தகேப்ய** - தலைகளின் பொருட்டு, **நம** - வணக்கம்.

உன் தந்தையான பரமசிவன், உன்னைப் பார்த்து, "குழந்தாய் என்னுடைய உடம்பில் இருந்து உண்டான நீ, தீர்க்க ஆயுளுடன் இருக்க வேண்டும்" என்று கூறி ஆறு தலைகளையும் ஆறுமுறை உச்சி மோர்ந்து பார்க்கிறார். அந்த ஆறு தலைகள் உலக உயிர்களின் நலன்கள் என்ற பொறுப்பை ஏற்கின்றன. அந்த ஆறு தலைகளில் ரத்தினங்களாலான கிரீடங்கள் அலங்கரிக்கின்றன. எனவே அந்தத் தலைகளுக்கு வணக்கம்.

அஞ்சு முகம் தோன்றின் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரில் அஞ்சேல் என்று வேல் தோன்றும் - நெஞ்சில்
ஒருகால் நினைக்கின் இரு காலும் தோன்றும்
முருகா என்று ஓதுவார் முன்

- நக்கீரர், திருமுருகாற்றுப்படை

தன்னுடைய பக்தர்களுக்குப் பிரச்சனை என்று வரும் போது, ஐந்து முகம் கொண்ட சிவ பெருமான் வருவதற்கு முன்பாகவே, முருகன் வந்து விடுவார். தன்னை ஒரே ஒரு நொடி நினைத்து, முருகா! என அழைப்பவர்கள் முன்பு என்பது தான் இந்தப் பாடலின் பொருள். முருகா என ஒரே ஒரு முறை உண்மையான பக்தியுடன் கூப்பிட்டால் அவர்கள் முன் முருகனின் ஆறுமுகம், வேல், இரு திருவடிகள் ஆகியவை தோன்றி, ”நான் இருக்கிறேன் பயப்படாதே” எனக் கூறுவதாக நக்கீரர் இந்தப் பாடலில் கூறி உள்ளார். மேலும்,

ஏறுமயில் ஏறி விளையாடும் முகம் ஒன்றே!
ஈசருடன் ஞானமொழி பேசும் முகம் ஒன்றே!
கூறும் அடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே!
குன்று உருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே!
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே!
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே!
ஆறுமுகம் ஆன பொருள் நீ! அருள வேண்டும்!
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே!

- (திருப்புகழ் *-1328*)

அருணகிரிநாதர் ஆறுமுகமும் அதன் செயலும் குறித்து திருப்புகழில் பாடுகிறார்

சமஸ்கிருதம்

17. முருகனின் அணிகல வர்ணனை

ஸ்புரத்ரத் ன கேயூரஹாராபிராம ..
ஸ்சலத் குண்டல ச்ரீலஸத் கண்டபாக
கடௌ பீதவாஸா கரே சாருசக்தி
புரஸ்தான் மமாஸ்தாம் புராரேஸ் தனூஜ

தமிழ்

17. முருகனின் அணிகலன்

பரமசிவனின் பாலகனே! உன் தோள்கள் தங்கும் தோள்வளையே!
பட்டொளி வீசும் மார்பினிலே மணிஆரம் அழகாய் ஆடிடுமே!
காதில் அசைந்திடும் குண்டலங்கள் உன் முகவொளி கூட்டிக்
காட்டுதய்யா!
தீதில் கைகளில் வேலுடனே வருவாய் பார்வதி பாலகனே!

ஆங்கிலம்

17. Murugan's Adornments

Oh son of Paramashivan, with shoulders that gleam,
In the golden light, your chest does beam.
The jeweled necklace, so fair and bright,
Dances on your chest in radiant light!
The earrings swing, your face aglow,
You show your light, in the divine glow!
With your spear in hand, from the fire you come,
Oh son of Parvati, our victory's won!

ஸ்புரத்ரத்னகேயூர ஹாராபி ராம - ஒளிவீசும் ரத்தினமயமான தோள்வளை, **ஹாரம்** - மாலை இவற்றோடு விளங்குகிறவரும், **சலத்குண்டலச்ரீல ஸதகண்டபாக** -

எப்பொழுதும் காதுகளில் அசைந்தாடும் குண்டலங்களின் ஒளியால் பிரகாசிக்கும் கன்னங்களையும் உடையவராயும், **கடௌ** - இடுப்பில், **பீதாவாஸா** - பட்டாடையை உடுத்திக் கொண்டிருப்பவராய் இருக்கின்றவரும். **கரே** - கையில், **சாருசக்தி** - சக்தி என்ற ஆயுதத்தைத் தரித்துள்ளவரும், **புராரே** - சிவபெருமானின், **தநூஜ** - மைந்தனான குமரன், மம - எனக்கு, **புரஸ்தாத்** - முன்பாக, **ஆஸ்தாம்** - விளங்கட்டும்.

சிவபெருமானின் மைந்தனான குமரப் பெருமான் தோள்களில் தோள்வளை அணிந்துள்ளார். மார்பில் மாலையை அணிந்துள்ளார். காதுகளில் அணிந்துள்ள குண்டலங்களால் கன்னங்கள் பளபளக்கின்றன. கையில் சக்தி தந்த ஆயுதத்தை ஏந்தியுள்ளார். இவர் என் முன்பாக பிரகாசமாகத் தோன்றட்டும்.

சமஸ்கிருதம்

18. ஆறெழுத்து மந்திரம்

இஹாயாஹி வத்ஸேதி ஹஸ்தான் ப்ரஸார்யா
ஹவயத்யாதராச் சங்கரே மாதுரங்காத்
ஸமுத்பத்ய தாதம் ச்ரயந்தம் குமாரம்
ஹராஸ்லிஷ்டகாத்ரம் பஜே பாலமூர்த்திம்

தமிழ்

18. ஆறெழுத்து மந்திர மகிமை

ஆறெழுத்து மந்திரம் சரவணபவ எனும் மந்திரம்
யாரெடுத்து ஓதினாலும் நன்மை அளிக்கும் மந்திரம்
அம்மை ஓத அவர்மடியில் தந்தை ஓத அவர்மடியில்
எம்மைக் காக்க நான் கொஞ்ச எனையும் பார்க்க வருவாயே!

ஆங்கிலம்

18. The Glory of the Six-Lettered Mantra

The six-letter mantra, "**Saravanabhava**" so pure,
Whoever chants it, blessings are sure.
Mother's chant or father's prayer,
In their grace, protection's there.
With humble hearts, we seek to stay,
May you, Murugan, light our way!

இஹ - இங்கு, **ஆயாஹி** - வா, இதி - என்று, **ஹஸ்தாந்** - கைகளை, **ப்ரஸார்ய** - நீட்டிக் கொண்டு, **சங்கரே** - தந்தையான சங்கரன், **ஆதராத்** - பிரியமுடன், ஆஹ்வயதி ஸதி - கூப்பிடும் பொழுது, **மாது** - தாயாரான பார்வதியினுடைய, **அங்காத்** - மடியில் இருந்தும், **ஸமுத்பத்ய** - வேகமாகக் கிளம்பி, **தாதம்** - தகப்பனான சங்கரனை, **ச்ரயந்தம்** - அடைந்த, **ஹராச்லி'ஷ்டகாத்ரம்** - சங்கரனால் ஆரத்தழுவிக் கொள்ளப்பட்ட தேகத்துடன் இருப்பவரும், **பாலமூர்த்திம்** - குழந்தைப் பருவமான தேகத்துடன் இருப்பவரும் ஆகிய, **குமாரம்** - குமார சுவாமியை, **பஜே** - வேண்டுகிறேன்.

சங்கரனான சிவபெருமான் தனது மகனான குழந்தை குமாரனை இங்கு வா! என்று இருகரம் நீட்டி அழைக்க, தாயான பார்வதியின் மடியில் இருந்து குமரன் விரைந்து வந்து தந்தையான பரமசிவனை அடைகிறார். சிவபெருமான் தனது குழந்தையான குமரனை ஆரத்தழுவிக் கொள்கிறார். இந்தச் சிறப்புடைய தேகத்துடன் இருக்கும் குமாரசாமியைப் பூஜிக்கிறேன் என்கிறார் ஆதி சங்கரர். முருகனை வணங்கும் போது சிவன், சக்தி, குமரன் என்று மூவரையும் சேர்த்து வணங்குவதாய் ஆகிறது. ”சோமாஸ்கந்தர்” என்றால் சிவனுக்கும் உமைக்கும் நடுவில் முருகக் கடவுள் இருப்பதைக் காணலாம்.

இல்லற வாழ்வின் இன்பத்தையும் நன்மக்கட்பேறு போன்றவற்றை வலியுறுத்தும் வண்ணம் இறைவனே தன் குடும்பத்தினருடன் பக்தர்களைக் காப்பதற்கு என ஏற்பட்டது. இவரைத் துதித்தால் குழந்தைவரம் கிடைக்கும் என்பதை,

"மல்லல்வளங் கனிந்த புகழ்க் கமலேசர் திருவுருவம் வாமபாகத்
தல்லமர்பைங் குழலுமையோ டிருவுருவு மொருவருவாம்
குணங்கள் மூன்றின் நல்லுருவா தலினன்றோ
விவரகில காரணராய் நவில்கின்றாரே"

- திருவாரூர் நான்மணிமாலை (குமரகுருபரர்)

சோமாஸ்கந்தக் கடவுளைப் பற்றி குருமரகுருபரர் குறிப்பிடுகிறார். மேலும் கந்தனின் மந்திரங்களாவன,

"சரவணபவ என்று சொன்னால் ஆறு எழுத்து மந்திரம்"
"ஆறுமுகம் என்று சொன்னால் ஐந்து எழுத்து மந்திரம்"
"கந்தன் என்று சொன்னால் நாலு எழுத்து மந்திரம்"
"முருகா என்று சொன்னால் மூன்று எழுத்து மந்திரம்"
"வேல் என்று சொன்னால் ஈரெழுத்து மந்திரம்"
"ஓம் என்று சொன்னால் ஓரெழுத்து மந்திரம்"

சமஸ்கிருதம்

குமாரேச ஸூனோ குஹ ஸ்கந்த ஸேனா
பதே சக்தி பாணே மயூரா திருட
புளிந்தாத்மஜாகாந்த பக்தார்த்தி ஹாரின்
ப்ரபோ தாரகாரே ஸதா ரக்ஷமாம் த்வம்

தமிழ்

19. புலடைக்கும் ஆற்றல்

குமரேச குகனே கந்தசாமியே! குலம்தனைக் காக்கும் தேவதேவே!
அமரரைக் காக்கும் அதிதீரனே! வேலாயுதனே உமைமைந்தா!
புலன்கள் கூடி ஆட்டிடுதே! குமரா நீயே வந்திடப்பா
புலிந்தன் குலவள்ளி சூழநின்று ஓட்டிடு எந்தன் வலிதனையே!

ஆங்கிலம்

19. Power to Defeat the Mighty

Oh Kumaresa, Guhana, Lord of War,
Protector of clans, deity we adore!
You guard the immortals, swift and strong,
With the spear in hand, you lead us along!
The senses unite, they dance in the fray,
Kumara, come forth, and lead the way!
With the goddess by your side, let us run,
For our strength is yours, and victory's won!

குமரேசா - குமரேசனே, **ஈச ஸூநோ** - எல்லா உலகத்திற்கும் அதிபதியான சிவபெருமானின் மைந்தனே. **குஹ** - குகன் என்ற பெயர் கொண்ட இறைவனே, **ஹேஸ்கந்த** - கந்தனே. **ஹே ஸேனாபதே** - தேவர்களின் படைக்கு அதிபதியே, **ஹே சக்திபாணே** - சக்தியின் வடிவமான வேலாயுதத்தைக் கையில் ஏந்தியிருக்கும் சூரனே, **புலிந்தா மஜாகாந்த** - புலிந்தன் என்ற

வேடர்குலத்தில் பிறந்த வள்ளி என்ற பெண்ணின் மனதை மகிழ்ச்சி கொள்ளச் செய்யும் பிரபுவே, **பக்தார்த்தி ஹாரின்** - பக்தரின் சகல தோஷங்களை அபகரிக்கும் சுவாமியே, **ஹேதாரகாரே** - தாரகாசுரனின் பகைவனான சுப்பிரமணிய சுவாமியே, **ஹே** ப்ரபோ - ஹே சுவாமி, **மாம்** - என்னை, **ஸதா** - எப்பொழுதும், **த்வம்** - நீ, **ரசஷ** - காக்க வேண்டும்.

மன்மதனை விலக்கி நின்ற குமரேசனே, அனைத்து உலகங்களையும் ஆட்கொண்ட பரமேஸ்வரனின் புத்திரனே, பதவி, உருவம், மனம், மந்திரம், கவசம், தோத்திரம் ஆகியவற்றிற்குப் பொருத்தமாயுள்ள குகனென்ற பெயர் கொண்டவனே. பக்தனுடைய பாவங்களை நீக்கி முக்தியை அளிக்கும் வல்லமையுள்ள கந்தனே. தேவர்களாகிய படைகளுக்கு அதிபதியே பராசக்தியின் உருவமான வேல் என்ற ஆயுதத்தைக் கையில் ஏந்தி இருப்பவனே. புலிந்தன் என்ற வேடர் குலத்து மங்கையான வள்ளியின் மனதை மகிழ்ச்சி கொள்ள செய்பவனே. பக்தர்களின் துன்பங்களை அகற்றுபவனே. தாரகாசுரனின் பகைவனே. என்னை எப்பொழுதும் காக்க வேண்டும். இதனையே,

உருவாய் அருவாய், உளதாய் இலதாய்
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய், கதியாய் விதியாய்
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே.

(கந்தர் அநுபூதி.*51*)

என கந்தர் அநுபூதியும் அனைத்து உயிர்களையும் அழிவு காலத்தில் தன் மேனியில் வைத்துத் தாங்குபவனும், படைக்கும் காலத்தில் அனைத்து உயிர்களுக்கும் உயிராய், ஆன்மாவாய் திகழ்பவனும், அவ்வுயிர்களின் வினைப்பயனாய் உள்ளவனும், முத்தி நிலையில் அவ்வுயிர்கள் சென்றடையும் நிலையாக உள்ளவனுமான கந்தக் கடவுளே, நீயே குருவாக வந்து என்னை ஆட்கொள்ளவேண்டும் என்கிறார் அருணகிரியார்.

சமஸ்கிருதம்

20. அனாதைகளைக் காப்பவன்

ப்ரசாந்தேந்த்ரியே நஷ்டஸம்க்ஞே விசேஷ்டே
கபோத்காரி வக்த்ரே பயோத்கம்பி காத்ரே
ப்ரயாணோன்முகே மய்யநாதே ததானீம்
த்ருதம் மே தயாளோ பவாக்ரே குஹத்வம்

தமிழ்

20. அனாதைகளைக் காப்பவன்

எந்தன் உடலும் ஒடுங்கியதே புலன்கள் ஐந்தும் தளர்ந்தனவே
பந்தம் பாசம் தேடியே காலும் கையும் ஓயந்தனவே
வாதம் பித்தம் சிலேத்துமம் வகை தெரியாமல் போனதே!
நாதா சரவணபவயென நான், நினைத்தால் சடுதியில் வருவாயே!

ஆங்கிலம்

20. The Protector of the Helpless

My body trembles, quivers with fear,
My senses weaken, but hope draws near.
The bond of love fades, hands grow still,
Arguments rise, but peace is your will.
In madness I wandered, unsure, unclear,
But in "Saravanabhava," you appear!
When I call your name, you'll come to stay,
In your divine grace, you light the way!

ஹேகுஹ - இரகசியமான மகிமையுள்ள சுவாமியே, **தயாளோ** - கருணாநிதியே, **த்வம்** - நீ, **மயி** - என்னிடம், **பரசாந்தேந்த்ரியே** - ஒடுங்கிய புலன்களுடன் இருப்பவனாய், **நஷ்டஸம்க்ஞே** - நினைவாற்றல் இல்லாதவனாய், **விசேஷ்டே** - கை, கால்களை

அசைக்க கூட முடியாமல் ஓய்ந்து இருப்பவனாய், **கபோத்தாரி வக்த்ரே** - தொண்டைக் கபம் காரணமாக நுரையைக் கக்குபவனாய், **பயோத் கம்பிகாத்ரே** - யம பயம் காரணமாக நடுங்குகின்ற உடலுடன் இருப்பவனாய், **ப்ரயாணோந்முகே** - உடலைவிட்டுப் பரலோகம் செல்ல சித்தமுடையவனாய், **அநாதே "ச"ஸதி** - என்னை ரட்சிக்க வேறு தெய்வம் இல்லாத நிலையில் **ததாநீ** - அப்பொழுது, **த்ருதம்** - விரைவாக, **மே** - எனக்கு, **அக்ரே** - முன்பாக, **பவ** - தோன்றி காக்க வேண்டும்.

குகனே, நான் புலன்கள் ஒடுங்கிய நிலையில் இருக்கும் போதும், நினைவாற்றல் இல்லாத நிலையின் போதும், உடம்பை அசைக்கமுடியாத நிலையின் போதும், தொண்டைச் சளி காரணமாக நுரையைக் கக்கும் போதும், யமபயத்தால் உடல் நடுங்கும் போதும், இந்த உடலை விட்டு மேலுலகம் செல்லச் சித்தமாய் இருக்கும் போதும், நீ என் முன்பு பிரகாசமாய் தோன்றி ரட்சிக்க வேண்டும்.

கடைசி காலத்தில் உடலில் உள்ள உறுப்புகளின் செயல்பாடுகள் குறைவாக இருக்கும். புலன்கள் ஒடுங்கிவிடும், பல விதமான நோய்கள் உண்டாகும். இந்த நிலையில் இறைவனின் பெயர் நினைவிற்கு வராது. அந்தக் காலத்திலும் முருகனின் பெயரை உச்சரிக்க குமரனின் அருள் வேண்டும் என வேண்டுகிறார் ஆசிரியர்.

சமஸ்கிருதம்

21. எமபயம் நீங்க

க்ருதாந்தஸ்ய தூதேஷு சண்டேஷுகோபா
த்தஹச்சின்தி பிந்தீதி மாம் தர்ஜயத்ஸு
மயூரம் ஸமாருஹ்ய மாபைரிதி த்வம்
புர சக்திபாணிர் மமாயாஹி சீக்ரம்

தமிழ்

21. எமபயம் நீங்க

மரணம் எதிர்கொள்ளும் வேளையிலே பயம்தரும் எமனின் தூதர்களை
கரணம் போட வைப்பதற்கு வேலனே உன்னை நினைப்பேனே!
திருச்செந்தூர் திருத்தலம் போற்றி; போற்றி செந்தில் ஆண்டவனே!
கையில் அபயம் தந்தபடி எமபயம் நீக்க நீ வரவேண்டும்!

ஆங்கிலம்

21. Removal of Fear

In the face of death, when fear draws near,
The messengers of Yama instill despair.
But with the spear, the divine protector stands,
I think of you, Lord, with your mighty hands!
Praise be to the sacred temple of Tiruchendur,
Praise to you, Lord of the battlefield, so pure!
With the symbol of fearlessness in your hand,
You come to remove all dread from the land!

க்ருதாந்தஸ்ய - யமனுடைய, **சண்டே** - கோபமான பயங்கரத் தோற்றமுள்ள, **தூதே** - தூதர்கள், **கோபாத்** - கோபத்துடன், **தஹ** - சுடு, **சிந்தி** - வெட்டு, **பிந்தி** - இரண்டாகப்பிள, **இதி** -

என்று, **மாம்** - என்னை, **தர்ஜயத்ஸு ஸத்ஸு** - அதட்டி கொடுமைப்படுத்தும் போது, **ஹே ஸ்வாமிந் - ஹே** குமரக் கடவுளே, **த்வம்** - நீ, **சக்திபாணி** - சக்தியென்ற வேலாயுதத்தைக் கையில் ஏந்திய படி, **மயூரம்** - மயில் வாகனத்தில், **ஸமாருஹ்ய** - ஏறிக்கொண்டு, **மாபை** - பயப்பட வேண்டாம், **இதி** - என்று சமாதானமாகக் கூறி, **மம** - எனக்கு, **புர** - எதிரில், **சீக்ரம்** - விரைந்து, **ஆயாஹி** - வரவேண்டும்.

மரண காலத்தில் பயங்கரமான தோற்றம் கொண்ட எமதூதர்கள், கோபத்துடன் வந்து பலவிதமாக மிரட்டி என்னைக் கொடுமைப் படுத்தும் போது, குமரக் கடவுளாகிய நீ, வேலாயுதத்தைக் கையிலேந்திய படி மயில் வாகனத்தில் ஏறிவந்து, அஞ்சவேண்டாம் என்று கூறியபடி, விரைவாக என்முன்னே வரவேண்டும்.

மரண காலத்தில் எமதூதர்களைப் பார்த்து அஞ்சும் பிராணிகளை முருகன், ஆயுதங்களைக் கையில் ஏந்தியபடி மயில் மீது ஏறி வந்து பக்தன் முன்பு தோன்றி "அஞ்சவேண்டாம்" என்று கூறி பயத்தைப் போக்குவதை,

கந்தா என்றிட கருணையே பொழிவான்
சரவணா என்றிட சரணம் தருவான்
ஆறுமுகா என்றிட அபயம் அளிப்பான்
முருகா என்றிட முக்தியும் அருள்வான்!

என்னும் பாடல் புலப்படுத்துகிறது.

சமஸ்கிருதம்

22. சுப்ரமண்ய உபாசனை

ப்ரணம்யா ஸக்ருத் பாதயோஸ்தே பதித்வா
ப்ரஸாத்ய ப்ரபோ ப்ரார்த்தயேனேக வாரம்
நவக்தும் க்ஷமோஹம் ததானீம் க்ருபாப்தே
நகார்யாந்தகாலே மனாகப்யுபேக்ஷா

தமிழ்

22. முருக உபாசனை

குமரா உந்தன் திருப்பாதம் அனுதினம் பலமுறை வணங்கிடுவேன்
அமரர் ஊர்தியில் நான் ஏகுமுன்னே! நானும் இன்றே பாடுகிறேன்
மரணத்துயரம் அணுகையிலே வாயும் மனமும் தடுமாறிடுமே!
கரணங்கள் ஒடுங்கிய காலத்திலே கருணா மூர்த்தி நீ
வந்தருள்வாயே!

ஆங்கிலம்

22. Worship of Murugan

Kumara, I bow to your feet every day,
In the chariot of immortals, I make my way!
Today, I sing to you in fear of death,
My mouth and mind falter, short of breath!
When all causes falter and time is bleak,
You, the embodiment of mercy, I seek!
In your divine grace, may you come near,
To bless me, and remove all fear!

தே - உன்னுடைய, **பாதயோ** - பாதங்களில், **பதித்வா** - விழுந்து, **அஸக்ருத்** - அடிக்கடி, **ப்ரணம்ய** - வணங்கியும், **ப்ரபோ** - ஹே பிரபுவே, **அநேக வாரம்** - பலதடவை, **ப்ரஸாத்ய** - உன்னை மகிழ்ச்சி அடையச் செய்து, **ஹேக்ருபாப்தே** -

ஹே கருணாநிதியே, **ததாநீம்** - என்னுடைய உயிர் பிரியும் காலத்தில், **அஹம்** - நான், **வக்தும்** - பேசுவதற்கு, “ந” **சஷம்** - சக்தி இல்லாதவனாக ஆகிவிடுவேன், **அந்தக்காலே** - அந்தக் கடைசிக் காலத்தில், **மநாகபி** - சிறிதளவு கூட, **உபேஷா** - அலட்சியம், **நகார்யா** - செய்யக்கூடாது, **இதி** - என்று, **ப்ரார்த்தயே** - வேண்டுகிறேன்.

குமரப் பெருமானே, உன்னுடைய திருப்பாதங்களில் விழுந்து வணங்கிப் பலமுறை உன்னை மகிழ்ச்சி அடையச் செய்கிறேன். பிரபுவே! என்னுடைய உடலில் இருந்து உயிர் பிரியும் காலத்தில் நான் பேசக்கூட இயலாதவன் ஆகிவிடுவேன். அந்தக் கடைசி காலத்தில் வாளாவிருந்து விடாமல் வரவேண்டும் என வேண்டுகிறேன். இதனைப் போன்றே பெரியபுராணத்தில் இனி பாவப்பட்ட உலகில் பிறக்காத வரம் வேண்டும் என்றும் மீறி பிறந்தால் இறைவனே உன்னை மறக்காமல் இருக்கும் வரம் வேண்டும் என்பதை,

இறவாத இன்ப அன்பு வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும் பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும் நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன் அடியின்கீழ் இருக்க என்றார்.

(பெரியபுராணம் 1781பாடல் 5.4.60)

என்னும் பாடலடிகள் உணர்த்துகின்றன.

சமஸ்கிருதம்

23. மனச் சஞ்சலம் நீக்கும் மருந்து

ஸஹஸ்ராண்ட போக்தா த்வயா ஸூரநாமா
ஹதஸ்தாரக ஸிம்ஹவக்த்ரச்ச தைத்ய
மமாந்தர் ஹ்ருதிஸ்தம் மன க்லேசமேகம்
ந ஹம்ஸி ப்ரபோ கிம் கரோமி க்வயாமி

தமிழ்

23. மனச் சஞ்சலம் நீக்கும் மருந்து

அன்று இந்த அண்டத்தை ஆயிரம் கூறாய் ஆக்கியவன்
தின்று கொழுத்த சூரபதுமனையும் அண்டம் அதிர வதம் செய்தாய்
இன்று எந்தன் நெஞ்சத்தை கூறிடும் ஆசைகள் ஆயிரத்தை
ஒன்றும் செய்யாமல் நிற்பதுவே உனக்கே அழகா ஆண்டவனே!

ஆங்கிலம்

23. Remedy for Mental Turmoil

You, who created this universe with a thousand forms ,
The mighty demon, defeated by your sword,
You shook the cosmos with your power divine,
Today, my heart's desires, a thousand, entwine.
Yet, without action, they stand still and mute-
Is this not the beauty of your absolute?
Oh Lord, how wondrous is your grace,
In stillness, you shine with eternal embrace!

ஸஹஸ்ராண்ட போக்தா - இந்த உலகத்தை ஆயிரம் அண்டங்களாகச் செய்து ஏக போகமாக ஆட்சி செய்து வந்த **சூரநாமா** - சூரன் என்ற அசுரன், **த்வயா** - உன்னால், **ஹத** - வதம் செய்யப்பட்டான், **ததா** - அவ்விதமே, **தாரக** -

தாரகாசுரனும், **ஸிம்ஹவக்த்ர** - சிம்ம வக்தரன் என்ற, **தைத்யச்ச** - அசுரனும், **ஹத** - கொல்லப்பட்டான், **மம** - என்னுடைய, **அந்தர்ஹருதிஸ்தம்** - மனமென்னும் ஆகாயத்திற்குள் இருக்கும், **ஏகம்** - ஒன்றான, **மந க்லேசம்** - மனதில் தாபமென்ற சஞ்சலத்தை மட்டும், **ஹே பிரபு** - ஹே ஸ்வாமியே, **நஹம்ஸி** - கொல்லாமல் இருக்கிறாயே, **கரோமி** - நான் என்ன செய்வேன்? **க்வயாமி** - எங்குதான் போவேன்?

இந்த உலகத்தைச் சூரன் என்ற அசுரன் ஆயிரம் அண்டங்களாகப் பிரித்து ஏக சக்கரவர்த்தியாக ஆண்டு வந்தான். அவனையும் அவனது தம்பிகளான தராகாசுரனையும் சிம்ம வக்த்ரனையும் வதம் செய்தாய். என் மனமென்ற ஆகாயத்தில் தாபம் என்ற சஞ்சலம் உருவாகி இருக்கிறது. அதைக் கொல்லாமல் இருக்கிறாயே. நான் என்ன செய்வேன், எங்கு போவேன்?

ஓராயிரம் அண்டங்களைக் கொண்ட சூரபதுமன், அவன் தம்பிமார்களாகிய சிங்கமுகன், ஆனைமுகன், ஆகியவர்களின் வலிமையை நாசஞ் செய்தழித்த வடிவேலைக் கையில் தாங்கி சீரலைவாயில் வீற்றிருக்கும் அதிபனே! என் மனநோயை ஒழிப்பாயாக. மனம் சஞ்சலம் அடைந்தவர்கள் திருச்செந்தூர் திருத்தலம் சென்று ஆறுமுகக் கடவுளை வணங்க நம் நோய் நீங்கும் என்கிறார் ஆதிசங்கரர்.

சமஸ்கிருதம்

24. மனவியாதி நீங்கும்

அஹம் ஸர்வதா துக்கபாரா வஸந்நோ
பவான் தீனபந்து ஸ்த்வதன்யம் நயாசே
பவத்பக்தி ரோதம் ஸதா க்லுப்த பாதம்
மமாதிம் த்ருதம் நாசயோமா ஸுதத்வம்

தமிழ்

24. மனவியாதி நீங்கும்

மனத்தின் கவலை முற்றியதே தனத்தின் காமம் வற்றியதே
குணத்தின் குன்றே குமரேசா - இக்கணத்தே இந்நிலை மாற்றிடுவாய்
பாவத்தைக் களையும் வழியொன்றே! அதை அறிந்தே உன்னைப் போற்றுகிறேன்
பார்வதி மைந்தா செந்திலாண்டவா மனக்கவலையை உடனே ஓட்டிடுவாய்!

ஆங்கிலம்

24. Cure for Mental Affliction

The worries of the mind have come to an end,
Desires of the self have begun to bend.
The flaws of my nature have been overcome,
Oh Kumara, change this state and make me one!
In this very moment, may you transform my heart,
And grant me peace that never will depart.

ஹே உமாஸுத - பார்வதியின் மைந்தனான சுப்ரமணியக் கடவுளே, **அஹம்** - நான், **ஸர்வதா** - எப்பொழுதும், **துக்க பாரா வஸந்ந** - துக்கத்தின் பாரத்தால் பாதிக்கப்பட்டவனாக

ஆகிறேன். **பவான்** - தாங்களோ, **தீநபந்து** - என்னைப் போன்ற நலிந்த உயிர்களைக் காக்கும் **த்வதந்யம்** - உன்னையின்றி வேறு தெய்வத்தை, **"ந" யாசே** - யாசிக்க மாட்டேன், **த்வம்** - நீ, **மம** - என்னுடைய, **ஸதா** - எப்பொழுதும், **க்லுப்தபாதம்** - இம்சையைச் செய்கின்றதாயும், **பவத்ப்திரோதம்** - உன்மீது கொண்டுள்ள பக்தியைத் தடுப்பதாயும் உள்ள, **ஆதிம்** - மனவியாதியை, **த்ருதம்** - விரைவாக, **நாசய** - நாசம் செய்வாயாக.

கந்தனே, நான் எப்பொழுதும் துக்கத்தால் பாதிக்கப்பட்டவனாக இருக்கிறேன். நீங்களோ சாதாரணமாக எங்களைக் காக்கின்ற உறவினன் ஆவீர்கள். உங்களைத் தவிர வேறு எந்தத் தெய்வத்திடமும் யாசிக்கமாட்டேன். என்னுடைய மன வியாதி எனக்குத் தொல்லை கொடுக்கிறது. உன்மீது பக்தி செலுத்தவிடாமல் தடுக்கிறது. எனவே அந்த மனவியாதியை விரைந்து நீக்கிடுவாயாக.

மனிதனைக் கொல்லும் வியாதி கவலையே ஆகும். இது நம்மை செயல்படவிடுவதில்லை. தொல்லை மட்டுமே தருகின்றது. இறைவனை வணங்கவும் விடுவதில்லை எனவே இத்தகைய கவலையை, வினையைக் களைய கந்தனை நக்கீரர் அழைப்பதை,

"உன்னை ஒழிய ஒருவரையும் நம்புகிலேன்
பின்னை ஒருவரையான் பின்செல்லேன் - பன்னிருகைக்
கோலப்பா! வானோர் கொடியவினை தீர்த்தருளும்
வேலப்பா! செந்தி வாழ்வே!" - திருமுருகாற்றுப்படை 5

என்னும் பாடலடிகளால் அறியமுடிகின்றது.

சமஸ்கிருதம்

25. முருகனின் விபூதி மகிமை

அபஸ்மார குஷ்ட க்ஷயார்ச ப்ரமேஹ
ஜ்வரோன்மாத குல்மாதிரோஹான் மஹாந்த
பிசாசாஸ்ச ஸர்வே பவத் பத்ர பூதிம்
விலோக்ய க்ஷணாத் தார காரே த்ரவந்தே

தமிழ்

25. முருகனின் திருநீறு மகிமை

கந்தன் நீறு சுமந்திட்ட பன்னீர் இலையின் காட்சியே
வந்த நோய்கள் அத்தனையும் தீர்ப்பது காட்சியின் மாட்சியே
வரும் நோய் வலிப்புத் தொழு நோயா! காசநோய்
வயிற்று வலி நோயா! சீதமுமா! தீர்ப்பது உன் திருநீறின்
நல்மாட்சியே!

ஆங்கிலம்

25. The Supreme Power of Murugan's Holy Ash

The sight of Lord Kandha, adorned with sacred ash,
Is the cure for ailments, with no need to dash.
All diseases vanish at the sight so grand,
For your healing power sweeps across the land.
Is it fever? Or disease in the gut?
Your holy ash removes all pain, making us whole,
The strength of your grace, a divine control!

ஹாந்த - மிகவும் பெரிய, **அபஸ்மாரகுஷ்ட** க்ஷயார்சப்ரமே **ஹஜ்வரோந்** மாதகுல்மாதி **ரோகா** - வலிப்பு, குஷ்டரோகம், க்ஷயரோகம், சுவாசரோகம், **மேகம்**, **ஜூரம்** சித்தசுவாதீனம், வயிற்றுவலி முதலிய ரோகங்களும், **ஸர்வே** - எல்லாவித

பிசாசாஸ்ச - பூதங்கள், பிரேதங்கள், பிரம்மராட்சஷசர்கள், முதலான சக்திகளும், **பவத்பத்ரபூதிம்** - பன்னீர் இலையில் விளங்கும் உன்னுடைய திருநீற்றை, **விலோக்ய** - பார்த்த உடனேயே, க்ஷனாத் - ஒரு க்ஷணத்திற்குள் **த்ரவந்தே** - ஓடி மறைந்து விடுகின்றன.

சுப்ரமணிய சுவாமியே! பன்னீர் இலையில் விளங்குகின்ற உன்னுடைய திருநீற்றைப் பார்த்த உடனேயே, வலிப்பு, தொழுநோய், காசநோய், சுவாசநோய், மேகம், காய்ச்சல், சித்த சுவாதீனம், வயிற்றுவலி முதலிய வியாதிகளும், பேய், பிசாசு, பிரேதம், பிரம்ம ராட்சஷசர் முதலான தீய சக்திகள் ஓடி மறைந்து விடுகின்றன.

செந்திலம்பதியில் அமர்ந்தருளும் தேவர்களுக்கெல்லாம் தேவனே உன்னுடைய இலை திருநீற்றைக் கண்ட மாத்திரத்தில் கை கால் வலிப்பு, காசம், க்ஷயம், குட்டம் முதலாய நோயும் பூதம், பைசாசம், தீவினைகள் யாவுமே விட்டோடிடும்.

இலை விபூதியின் மகத்துவம்

அபிநபகுப்தர் என்ற சித்தர் ஒருவர் கெடுதல் செய்யும் நோக்கத்தில் ஆதிசங்கரருக்கு செய்வினை, ஏவல், பில்லி, சூனியம் செய்தார். இதனால் சூலைநோய் உள்பட பல்வேறு நோய்களுக்கு ஆதிசங்கரர் உட்பட்டார். மனமுடைந்த ஆதிசங்கரர் இறைவனை நாடி மனமுருக வேண்டினார். இருந்தும் அவருக்கு நோய் குணமாகவில்லை. அவர் ஒவ்வொரு கோவிலாக சென்று இறுதியாக திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமிக்கு வந்து மனமுருக வேண்டினார். அப்போது ஆதிசங்கரர் கையில் பன்னீர் இலை திருநீற்றுப் பிரசாதம் வழங்கப்பட்டது. பிரசாதத்தை உடலில் பூசிக்கொண்டதோடு, அதை உட்கொள்ளவும் செய்தார். சில நாட்களில் அவரை தொற்றி இருந்த நோய்கள் அனைத்தும் முற்றிலும் குணமடைந்தது.

பன்னீர் இலை என்பதற்கு அர்த்தம். இலையில் மொத்தம் 12 நரம்புகள் இருக்கும். முருகப் பெருமான் தனது 12 கரங்களால்

இந்தப் பிரசாதத்தை வழங்கியதால் இந்தப் பன்னீர் இலையில் முருகப் பெருமானின் பன்னிரு கைகள் போன்று இருக்கும். பன்னிரு இலை என்ற பெயர் காலப்போக்கில் மருவி பன்னீர் இலை என்று கூறப்படுகிறது.

முருகப் பெருமானை வழிபட்ட தேவர்கள் அனைவரும் இந்தப் பன்னீர் மரங்களாக இருப்பதாகவும், அதில் இருந்து பெறப்படும் பன்னீர் இலைகள் பிரசாதமாக வழங்கப்படுவதால் அதற்கு தனி மகத்துவம் இருப்பதாகவும் கருதப்படுகிறது. இந்தப் பன்னீர் இலை திருநீற்றுப் பிரசாதம் தினமும் காலை விஸ்வரூப தரிசனத்தின் போது சுவாமி பாதத்தில் வைத்து பூசை செய்து பக்தர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. வேறு எந்தக் கோவிலிலும் இல்லாத சிறப்பாகத் திருச்செந்தூர் கோவிலில் இந்த இலை திருநீற்றுப் பிரசாதம் வழங்கப்படுகிறது. இந்த இலையை நேராக வைத்துப் பார்த்தால் முருகப் பெருமானின் வேல் போன்று காட்சி அளிக்கும்.

சமஸ்கிருதம்

26. புலன்கள் செய்ய வேண்டிய செயல்கள்

த்ருசி ஸ்கந்த மூர்த்தி ச்ருதௌ ஸ்கந்தகீர்த்தி
முகே மே பவித்ரம் ஸதா தச்சரித்ரம்
கரே தஸ்ய க்ருத்யம் வபுஸ்தஸ்ய ப்ருத்யம்
குஹே ஸந்து லீனா மமாசேஷ பாவா

தமிழ்

26. புலன்களின் கடமை

எந்தன் கண்கள் காணுவதோ முருகா உந்தன் தரிசனமே
எந்தன் காதுகள் கேட்பதுவோ கந்தபுராணக் கதைகளையே
வாய்கள் என்றும் ஓதிடுமே சரவணபவ என்னும் மந்திரமே
தேயும் புலன்கள் மீதினிலே உந்தன் ஆட்சி தொடரட்டுமே!

ஆங்கிலம்

26. The Duty of the Senses

What do my eyes see, Muruga, but your divine form?
What do my ears hear, but tales of your storm?
My lips chant only your sacred name,
"Saravanabhava," in your glory, I claim.
Let my senses serve you, free of decay,
May your rule in my life forever stay!

த்ருசி - கண்ணெதிரில், **ஸ்கந்தமூர்த்தி** - கந்தக் கடவுளின் **திவ்ய விக்ரஹமும், ச்ருதௌ** - காதுகளில், **ஸ்கந்தகீர்த்தி** - கந்தபுராணக் கதையும், **ஸதா** - எப்பொழுதும், **மே** - எனது, **முகே** - முகத்தில், **ப்வித்ரம்** - புனிதமான வாக்குகளால் மக்களுக்குப் பாவத்தைப் போக்கும், **தச்சரிதம்** - கந்தனின் பிறப்பு முதலான கதையைச் சொல்வதும், **கரே** - கையில், **தஸ்ய** - சுப்ரமணிய கடவுளுடைய, **க்ருத்யம்** - பாதபூஜையையும், **வபு** - எனது உடம்பானது, **தஸ்ய** - சுப்பிரமணியக் கடவுளுடைய, **ப்ருத்யம்** - தொண்டனாகவும், **மம** - என்னுடைய, **அசேஷபாவா** - ஒவ்வொரு பாவனைகளும், சேட்டைகளும், **குஹே** - சுப்பிரமணியக் கடவுளிடம், **விநா** - லயித்தவைகளாகவே, **ஸந்து** - ஆகட்டும்.

எனது கண்களுக்குச் சுப்பிரமணியனின் தரிசனம், காதுகளுக்குக் கந்தபுராணத்தைக் கேட்பது, வாக்குகளுக்குக் கந்தபுராணக் கதைகளை மக்களுக்குச் சொல்லுவது, கைகளுக்கு மலர்களால் சுப்ரமணியரின் பாதங்களுக்கு அர்ச்சனை செய்வது, உடலிற்கு அவரது தொண்டனாய் இருப்பது, அத்துடன் எனது அபிநயங்கள், சேட்டைகள் ஆகியவை அவரிடம் ஈடுபாடு கொண்டவைகளாகவே ஆகட்டும். மேலும் திருமுருகாற்றுப்படை வெண்பாவில்,

வந்த வினையும் வருகின்ற வல்வினையும்
கந்தன் என்று சொல்லக் கலங்கிடுமே
செந்தில் நகர் சேவகா என்று திருநீறு அணிவார்க்கு
மேவ வராதே வினை.

வந்த, வர இருக்கின்ற தீவினைகள் கந்தனின் திருப்பெயரைச் சொன்னால் கலங்கி நம்மை விட்டு விலகும். செந்தூர் வேலவா என்று சொல்லி திருநீறு பூசுவோருக்குச் சேவை செய்ய முருகன் ஓடி வருவான். தீவினை ஒருபோதும் தீண்டாது என்கிறார் நக்கீரர்.

சமஸ்கிருதம்

27.அனைவர்க்கும் கருனை செய்தல்

முனீனா முதாஹோ ந்ருணாம் பக்தி பாஜா
மபீஷ்டப்ரதா ஸந்தி ஸர்வத்ர தேவா
ந்ருணாமந்த்ய ஜாநாமபி ஸ்வார்த்ததானே
குஹாத்தைவமன்யம் நஜானே நஜானே

தமிழ்

27.அனைவருக்கும் கருணை செய்தல்

உனக்கு நிகராய் தெய்வமில்லை முருகா நீயே என் தெய்வம்
உன்னை நினையாதார் யாருமில்லை ஊரே உன்னைத் தேடுதைய்யா
முனிவர் முனைவர் தேவருடன் மாந்தர் குலமும் சேர்ந்ததையா
கனிவுடன் அருளும் கருணை நீயே! கதிர் வேலா செந்தில்
ஆண்டவனே!

ஆங்கிலம்

27. Showing Compassion to All

There is no god greater than you, Muruga,
You are my deity, my heart's true mantra.
No one else can compare, none can claim,
The whole world seeks you, calling your name.
The sages, the gods, and the humble crowd,
All turn to you, their voices loud.
With kindness and grace, you shower your light,
The Lord of the spear, who ends all plight!

ஸர்வத்ர - எல்லா உலகங்களிலும், **தேவா** - தேவர்கள், **முனீனாம்** - முனிவர்களுக்கும், **உதாஹோ** - இல்லாவிட்டால், **பக்திபாஜாம்** - பக்தியை அடைந்த, **ந்ருணாம்** - மனிதர்களுக்கும், அபீஷ்டப்ரதா - அவரவர்களின் விருப்பங்களைப் பூர்த்தி செய்பவர்களாக, **ஸந்தி** - ஆகிறார்கள். **அந்த்ய ஜாநாம்** - சண்டாளனாகப் பிறந்த, **ந்ருணாமபி** - மனிதர்களுக்கும், **ஸ்வார்ததாநே** - விருப்பத்தை நிறைவேற்றுவதில், **குஹாத்** - சுப்ரமணிய சுவாமியைக் காட்டிலும், **அந்யம்** - வேறான, **தேவம்** - கடவுளையே, **"ந"ஜாநே** - நான் அறியவில்லை.

பிரம்மன் முதலான தேவர்கள், முனிவர்களுக்கோ அல்லது பக்தி செலுத்தும் மனிதர்களுக்கோ அவர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றி வைக்கிறார்கள். ஆனால் முருகக் கடவுள் சண்டாளனாகப் பிறந்த மனிதர்களுக்கும், அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றியே வைக்கிறார். எனவே முருகனைக் காட்டிலும், வேறு தெய்வத்தை நான் அறியவில்லை. புலையர் குலத்தில் பிறந்த வேலனுக்கு உதவி செய்து கோவிலுக்குள் வர அனுமதியில்லாத அவனுக்குத் தினமும் தரிசனம் செய்யும் வண்ணம் வழிசெய்தான்.

சமஸ்கிருதம்

28. எங்கள் குல தெய்வம்

களத்ரம் ஸுதா பந்துவர்க பசுர்வா
நரோவாத நாரீ க்ருஹே யே மதீயா
யஜந்தோ நமந்த ஸ்துவந்தோ பவந்தம்
ஸ்மரன் தஸ்ச்ச தே ஸந்து ஸர்வே குமார

தமிழ்

28. எங்கள் குல தெய்வம்

திருச்செந்தூர் உறையும் செந்தில் வேலா திருவே நீயே என் குலதெய்வமே
திக்கற்றோர் குலத்தின் தெய்வம் நீயே மக்கள் மறவா மனமருள்வாய்.
எத்தனை பிறவி எடுத்தாலும் அத்தனையிலும் வேணும் உன்துணையே!
பக்தனை என்றும் காத்திடுவாய் சரணம் சரணம் முருகையா!

ஆங்கிலம்

28. Our Family's Divine Protector

In Tiruchendur, where you reign so grand,
Lord of the spear, with your healing hand.
You are the family deity, our guiding star,
Protector of kin, near and far.
May none forget your name, so pure,
In your grace, we will endure.

ஹேகுமார - ஹே! குமரக்கடவுளே! **க்ருஹே** - என் வீட்டிலுள்ள, **களத்ரம்** - மனைவியோ **ஸுதா** - பிள்ளைகளோ, **பந்துவர்க** - உற்றார் உறவினர்களோ, பசுக்களோ, **நரோ வா** -

மற்ற எந்த மனிதனோ, **அத** - அப்படியே, **நாரீ** - எந்தப் பெண்ணோ, **யே** - எவர்கள், **மதீயா** - என்னைச் சேர்ந்தவர்களோ, **தே ஸர்வே** - அந்த எல்லா மக்களும், **பவந்தம்** - உன்னை, **யஜந்த பூஜந்த** - பூஜை செய்கிறவர்களாயும், **ஸ்துவந்த** - துதிக்கிறவர்களாகவும், **நமந்த** - வணங்குகிறவர்களாகவும், **ஸமரந்தச்ச** - நினைக்கின்றவர்களாயும், **ஸந்து** - ஆக வேண்டும்.

என்னுடைய மனைவி மக்கள், உற்றார், உறவினர், பசுக்கள், மற்ற மனிதர்கள், பெண்கள், என்னைச் சேர்ந்தவர்கள், இப்படி அனைவரும் உன்னைப் பூஜை செய்கிறவர்களாகவும் வணங்குகிறவர்களாகவும் நினைக்கின்றவர்களாகவும் ஆக வேண்டும்.

தனக்காக கேட்காமல் தன்னையும் தன்னைச் சார்ந்த உலக மக்களின் நலனுக்காக கேட்கிறார் ஆசிரியர். இதனைப் போன்றே வள்ளிமலை ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் எழுதியருளிய வேல்மாறலில்,

துதிக்கும்அடி யவர்க்(கு)ஒருவர் கெடுக்கஇடர்
நினைக்கின்அவர் குலத்தைமுதல் அறக்களையும்
எனக்(கு)ஓர் துணை ஆகும்
திருத்தணியில் உதித்(து)அருளும் ஒருத்தன்மலை
விருத்தன்என(து) உளத்தில்உறை
கருத்தன்மயில் நடத்துகுகன் வேலே.

(வள்ளிமலை ஸ்ரீ சச்சிதானந்த சுவாமிகள் - வேல் மாறல்)

என்னும் பாடலடிகள் சான்று பகர்கின்றன.

சமஸ்கிருதம்

29. சக்திவேலின் சிறப்பு

ம்ருகா பக்ஷிணோ தம்சகாயே சதுஷ்டா
ததா வ்யாதயோ பாதகா யே மதங்கே
பவச்சக்தி தீக்ஷ்ணாக்ர பின்னா ஸுதூரே
விநச்யந்து தே சூர்ணித க்ரெளஞ்ச சைல

தமிழ்

29. சக்திவேலின் சிறப்பு

எந்தன் உடம்பில் குடியிருக்கும் நுண்ணியிர் பலதரும் பல நோய்கள்
அந்த நோய்கள் அத்தனையும் ஒன்றாய் தீர்த்திடும் உன்வேலே!
உன்தாய் தந்த சக்தி வேலுடனே - காக்க நீயும் வருவாயே!
உடனே வருவாய் காப்பாய் வரம் அளிப்பாய் உமையின் பாலகனே!

ஆங்கிலம்

29. The Glory of Shakthi Vel

In my body reside countless tiny ills,
Many diseases, their power it kills.
All of them will fade in your mighty spear,
For in your Shakti, we have no fear!
With the power your mother bestowed on you,
You come to protect, steadfast and true.
Come quickly, Lord, with your blessing divine,
Save me now, Balakane, let your grace shine!

ஹேசூர்ணிதக் ரெளஞ்சசைல - உன்னைக் கண்டு பயந்து மலைவடிவில் இருந்துவந்த கிராணாசூரனைக் கொன்ற சுப்பிரமணிய சுவாமியே, **மதங்கே** - என் மேனியில், யே - எந்த, **ம்ருகா** - மிருகங்களோ, **பக்ஷிண** - பறவைகளோ, **தம்சகா** - கொசுக்களோ, **ததா** - அப்படியே, யேசதுஷ்தா - எந்தக்

கொடிய, **வ்யாதய** - வியாதிகளோ, **பாதகா** - என்னைத் தொல்லைப்படுத்துகின்றதாய், **பவந்தி** - இருக்கின்றதோ, **தே** - அவற்றையெல்லாம், **பவச்சக்தி தீக்ஷணாக்ர பின்னா** - தங்கள் கையிலுள்ள சக்தி ஆயுதத்தின் கூர்மையான முனையால் குத்தி, **ஸுதூரே** - வெகு தூரத்திற்கு அப்பால் தள்ளி, **விநச்யந்து** - நாசம் அடையும் படி செய்ய வேண்டும்.

உன்னைக் கண்டு பயந்து மலைவடிவில் இருந்த கிராணசுரனைக் கொன்ற சுப்பிரமணிய சுவாமியே. என் உடம்பில் மிருகங்களோ, பறவைகளோ, கொசுக்களோ, வியாதிகளோ, வேறு எதுவோ என்னைத் தொல்லைப்படுத்துகின்றதாக உள்ளதோ, அவற்றைத் தங்கள் கையில் இருக்கும் சக்தி ஆயுதத்தால் அதன் கூர்மையான முனையால் குத்தி வெகு தூரத்திற்கு அப்பால் தள்ளி நாசமடையச் செய்ய வேண்டும்.

அவனிடமே நாம் செய்யும் அனைத்து தவறுகளையும் கர்ம வினைகளையும் போக்குபடி செய்ய வேண்டும் என்பதை,

"வினைகள் யாவையுமே வேல்கொண்டு விரட்டிடுவாய்
தாரித்திரியங்களை உன் தடி கொண்டு விரட்டிடுவாய்
துக்கங்கள் அனைத்தையும் தொலைதூரம் போக்கிடுவாய்
பாப உடலைப் பரிசுத்த மாக்கிடுவாய்
இன்ப துன்பத்தை இருவிழியால் விரட்டிடுவாய்
ஆசைப் பேய்களை அறவே நசுக்கிடுவாய்
அகந்தைப் பிசாசை அழித்து ஒழித்திடடா"

(கந்த குரு கவசம் 244- 250)

கந்த குரு கவசத்தில் சாந்தானந்த சுவாமிகள் கூறுகின்றார்.

சமஸ்கிருதம்

30. உலகிற்கெல்லாம் தந்தை

ஜநித்ரீ பிதாச ஸ்வபுத்ரா பராதம்
ஸஹேதே ந கிம் தேவசேனாதி நாத
அஹம் சாதிபாலோ பவான் லோக தாத
க்ஷமஸ்வாபராதம் ஸமஸ்தம் மஹேச

தமிழ்

30. உலகிற்குத் தந்தையே பிழை பொறு

தங்கள் மகவின் பிழை பொறுத்தல் தந்தை தாயின் கடனன்றோ!
எங்கள் பிழைகள் பொறுத்திடுதல் தந்தை உந்தன் கடனன்றோ!
என்றும் எங்கள் பிழைபொறுத்து வினைவெறுத்து காப்பாய் அபயம் தந்து
பரமசிவனின் பாலகனே! பார்வதி மைந்தா உனை வேண்டுவனே!

ஆங்கிலம்

30. The Father's Forgiveness

A father bears the faults of his son with care,
As does a mother, in love so fair.
In the same way, we seek your grace,
To forgive our faults, and erase disgrace.
With patience, you bear our every sin,
And protect us from the trials within.
Grant us fearlessness, save us from strife,
Son of Shivaparvathi, guide our life!

ஜநித்ரீ - தாயோ, **பிதாச** - தந்தையோ, **ஸ்வபுத்ராபராதம்** - தன் குழந்தைகள் செய்த தவறுகளை, **நஸஹேதே கிம்** - பொறுத்துக் கொள்வதில்லையா என்ன?, **ததா** - அப்படியே, **அஹம் ச** - நானும், **அதிபால** - மிகவும் சிறுகுழந்தை, **பவாந்**

- தாங்களோ, **லோகதாத** - உலகிற்குத் தந்தை, **ஹே மஹேச** - சிவபெருமானின் மைந்தனான சுப்பிரமணிய சுவாமியே, **ஸமஸ்தம்** - எனது எல்லாவிதமான, **அபராதம்** - குற்றங்களையும், **க்ஷமஸ்வ** - பொறுத்துக்கொள்.

பெற்ற தாய் தந்தையார் தம் குழந்தைகள் செய்த பிழைகளைப் பொறுத்துக் கொள்வார்கள். அதுபோல் நானும் சிறுகுழந்தையாக இருக்கிறேன். தாங்களோ உலகிற்குத் தந்தை. உலகிற்குத் தந்தையான பரமசிவனின் மைந்தனான தாங்கள் என்னுடைய பிழைகளையும் பொறுத்துக் கொள்ள வேண்டும்.

குழந்தைகள் தவறு செய்வது இயல்பான ஒன்று. சிறியோர் பிழை பொறுப்பது பெரியோரின் கடன் என்பது பழமொழி. நாம் அனைவரும் இறைவனின் குழந்தைகள். தாயும் அவன் தான், தந்தையும் அவன் தான். உலகிற்குத் தந்தை என்றால் சிவபெருமான். அவனின் மகனான முருகன் ஓம் எனும் பிரணவத்தின் உருவமாக இருப்பதால் அவரும் உலகிற்குத் தந்தையே எனலொம்.

தாயாய்த் தந்தையாய் முருகா தக்கணம் நீ வருவாய்
சக்தியும் சிவனுமாய்ச் சடுதியில் நீ வருவாய்
பரம்பொருளான பாலனே ஸ்கந்தகுரோ

(கந்த குரு கவசம் 98-100)

சமஸ்கிருதம்

31. சுப்ரமணியர் ஆராதனை

நம கேகினே சக்தயே சாபி துப்யம்
நமச்சாக துப்யம் நம குக்குடாய
நம ஸிந்தவே ஸிந்து தேசாய துப்யம்
புன ஸ்கந்த மூர்த்தே நமஸ்தே நமோஸ்து

தமிழ்

31. செந்திலாண்டவர் ஆராதனை

வேத மயிலே போற்றி! சக்தி தரும் வேலே போற்றி!
நாதனின் சேவல் போற்றி! வாகனமாம் செம்மறிஆடு போற்றி!
திருச்செந்தூர் அமைந்துள்ள ஓயாத அலை கடலே போற்றி!
போற்றி!
திருச்செந்தூர் திருத்தலமே போற்றி! போற்றி செந்திலாண்டவனே!

ஆங்கிலம்

31. Worship of Lord Senthil

Hail to the Vedas, with their sacred song!
Hail to the Vel that makes us strong!
Hail to the servant of the Lord's command,
Who rides the peacock in the sacred land!
Hail to the ocean, the waves so grand,
Hail to the shores of Tiruchendur's sand!
Praise be to the temple, where we kneel,
Hail to you, Lord Senthil, our hearts you heal!

கேகிநே - மறைகளின் வடிவமான மயிலின் பொருட்டு, **நம** - வணக்கம், **அபிச** - இன்னமும், **சக்தயே** - மோட்ச சாதனமான பிரம்ம வித்யாரூபிணியான பராசக்தியாகிய வேல் என்ற

ஆயுதமான, **துப்யம்** - உனக்கு, **நம** - வணக்கம், **சாக** - மாயா தத்துவ ரூபமான செம்மறி ஆடு என்ற சுப்பிரமணிய சுவாமியின் வாகனமே, **துப்யம்** - உன் பொருட்டு, **நம** - வணக்கம், **குக்குடாய** - அகங்கார தத்துவமாகிய கோழி என்ற வாகனத்தின் பொருட்டு, **நம** - வணக்கம், **ஸிந்துதேசாய** - முக்திதரும் நகரமாகிய திருச்செந்தூர் திருத்தலம் என்ற கடலாகிய, **துப்யம்** - உனக்கு **நம** - வணக்கம், **ஸ்கந்த மூர்த்தே** - சுப்பிரமணியக் கடவுளே, **புனஹ** - மறுபடியும், **தே** - உன்பொருட்டு, **நம** - வணக்கம், **நம** - வணக்கம், **அஸ்து** - உன்னிடம் சேரட்டும்.

முருகனை மட்டும் வணங்கினால் போதாது. அவருடன் சேர்த்து மறைகளின் வடிவான மயிலையும் பராசக்தி தந்த வேலாயுதத்தையும் மாயாதத்துவ வடிவாக உள்ள செம்மறி ஆட்டையும் அகங்கார தத்துவமான சேவல் கொடியையும் ஆனந்த வடிவாக உள்ள கடலையும் திருச்செந்தூர் திருத்தலத்தையும் வணங்க வேண்டும்.

முருகனை வணங்குபவர்கள் பெரும்பாலும் அவனின் கொடி, வாகனம், ஆயுதம், தலம், தீர்த்தம் என அனைத்தையும் வணங்குவார்கள். முருகனை அழைக்க முடியாவிட்டாலும் வேல் மயில் இரண்டையும் அழைப்பார்கள் அடியவர்கள் என்பதை,

"எழும் போதும் வேலும் மயிலும் என்பேன்
எழுந்தே மகிழ்ந்து தொழும் போதும் வேலும் மயிலும் என்பேன்
தொழுதே உருகி அழும்போது வேலும் மயிலும் என்பேன்
அடியேன் உடல் விழும்போதும் வேலும் மயிலும் என்பேன்
செந்திலே! வேலவனே!"

\- சங்கராபரணம் - ஸ்ரீபாம்பன் சுவாமிகள்

என்னும் பாடலடிகள் மெய்ப்பிக்கின்றன.

சமஸ்கிருதம்

32. சண்முகனின் சாமர்த்தியங்கள்

ஜயாநந்த பூமன் ஜயாபார தாமன்
ஜயாமோக கீர்த்தே ஜயாநந்த மூர்த்தே
ஜயாநந்த ஸிந்தோ ஜயாசேஷபந்தோ
ஜயத்வம் ஸதாமுக்திதானேசஸூனோ

தமிழ்

32. ஆறுமுகத்தின் சாமர்த்தியம்

ஆறு முகத்தின் அருமைதனை கூறிட வார்த்தை எமக்கில்லை!
ஆறுதல் நமக்குத் தருவதுடன் நாடும் பரமுத்தி தந்திடுமே!
ஆனந்தம் கோடி தருவதற்கே சோதியாய் வருமே திருமுகமே!
அன்புடன் உரைத்த சொல்மாலை ஏற்றிடு பரமனின் பாலகனே!

ஆங்கிலம்

32. The Power of the Six-Faced One

The glory of the Six-Faced One, words fail to express,
Bringing peace and solace, a divine power, no less!
Endless joy and bliss, he grants without a cease,
The holy face shines, offering eternal peace.
With love, he speaks, his words a guiding light,
To the child of the Divine, he makes all things right!

ஹே ஆநந்தபூமந் - அபரிதமான ஆனந்தத்தை உருவமாகக் கொண்டவரான சுப்பிரமணியக் கடவுளே, **ஜய** - உன்னுடைய உற்சாகத்தைப் பிரகாசமாகக் காட்டு, **ஹே அபார தாமந்** - எல்லையற்ற பரஞ்ஜோதியை உருவமாகக் கொண்டவரே, **ஜய** - உன்னுடைய உற்சாகத்தைப் பிரகாசப்படுத்து, **ஹே**

அமோககீர்த்தே - அதிகப் புகழ் வாய்ந்த குமரக் கடவுளே, **ஜய** - உன்னுடைய உற்சாகத்தைப் பிரகாசப்படுத்து, **ஹே ஆனந்த மூர்த்தே** - ஆனந்த வடிவமாக இருக்கும் பரம் பொருளே, **ஜய** - உன்னுடைய பெருமையை வெளிப்படுத்து, **ஹே ஆனந்தஸ்ந்தோ** - பொதுவான ஆனந்தத்திற்குக் கடலாக உள்ளவரே, **ஜய** - உன்னுடைய சக்தியை வெளிப்படுத்து, **அசேக்ஷபந்தோ** - உயிர்களுக்குத் துணையாக உள்ள கடவுளே, **ஜய** - அந்தத் திறமையையும் பிரகாசப்படுத்து, **ஹே ஈசஸுதோ** - சிவபெருமானின் மைந்தனே, **முக்திதான** - முக்தியைத் தானமாக வழங்கும் மனம் உள்ளவரே, **ஸதா** - எப்பொழுதும், **த்வம்** - நீ, **ஜய** - உன்னுடைய சாமர்த்தியங்களை என்னிடம் பிரகாசப்படுத்தி என்னைக் காக்கவேண்டும்.

ஆனந்த உருவாக உள்ளவரும், பரஞ்சோதி வடிவாகக் காட்சி தருபவரும், கீர்த்தி உள்ளவரும், ஆனந்த மூர்த்தியும், ஆனந்தக் கடலாக இருப்பவரும், சிவபெருமானின் மைந்தனும், முக்தியைத் தானமாக அளிப்பவரும் ஆகிய சரவணனே எப்பொழுதும், உன்னுடைய சாமர்த்திய பிரதாபங்களை என்னிடம் ஒளியுடன் காண்பித்து என்னைக் காக்க வேண்டும்.

“அறிவொளியாய் வந்து நீ அகக்கண்ணைத் திறந்திடுவாய்
திருச்செந்தூர் ‘ஷண்முகனே ஜகத்குருவிற் கருளியவா”

- (கந்த குரு கவசம் 51-52)

முருகன் எல்லாவித இன்பங்களையும் தருபவர். அக இருளை அகற்றி மெய்ஞான ஒளியைத் தருபவர். நம்பியவர்களுக்கு நேரும் இடர்களைக் களைபவர். அறிவு எனும் ஒளியை ஊட்டுபவர்.

சமஸ்கிருதம்

33. பலச்ருதி

புஜங்காக்யவ்ருத்தேன க்லுப்தம் ஸ்தவம் ய
படேத் பக்தியுக்தோ குஹம் ஸம்ப்ரணம்ய
ஸபுத்ரான் களத்ரம் தனம் தீர்க்கமாயுர்
லபேத் ஸ்கந்தஸாயுஜ்யமந்தே நரஸ்ஸ

தமிழ்

33. கடைக்காப்பு

*எளியேன் பாடிய பாடல்களை வேண்டி ஓதிடும் யாவர்க்கும்
எல்லா வளமும் என்றும் கிட்டும் எனவே உறுதி சொல்லிடுவேன்
எண்ணில் அடங்கா வரத்துடனே நீளாயுள் நிறைசெல்வம் நல்கிடுமே!
கண்போல் அன்புடை மனைவி மக்கள் ஆறுமுகன் அருளால் எய்தல்
திண்ணம்!*

ஆங்கிலம்

33. Divine Protection

The songs I sing, for those who seek,
Will bring them wealth and joy so unique.
With certainty, I say, as I pray in grace,
Long life, abundance, a blessed embrace.
A loving wife, like the eye's gentle gleam,
Through Six-Faced grace, all hearts will beam!

ய - எந்தப் புண்ணியவான், **புஜங்காக்பவ் ருத்தேந** - புஜங்கம் என்ற பெயருடைய விருத்தத்தால், **கலுப்தம்** - செய்யப்பட்ட, **ஸ்தவம்** - சுப்பிரமணிய ஸ்தோத்திரத்தை, **குகம்** - சுப்பிரமணிய சுவாமியை, **ஸ்ம்ப்ரணம்ய** - வணங்கி, **பக்தியுத்த**

- பக்தியுடன் கூடியவனாய், **படேத்** - தினமும் படிக்கின்றானோ, **ஸ** - அவன், **புத்ரான்** - குழந்தைபேற்றையும், **களத்ரம்** - அமைதியான குணமுடைய மனைவியையும், **தனம்** - அளவற்ற செல்வத்தையும், **தீர்க்கம்** - நீண்டகால, **ஆயு** - ஆயுளையும், **லபேத்** - அடைக்கிறான், **ஸ நர** - அந்தப் புண்ணியவான், **அந்தே** - கடைசிக் காலத்தில், **ஸ்கந்த ஸாயுஜ்யம்** - சுப்பிரமணியர் கடவுளின் திருவடிகளில் சேரும் நிலையையும், **லபேத்** - அடைகிறான்.

கந்தனை வணங்கி, இந்தச் சுப்பிரமணிய புஜங்கத்தைப் பக்தியுடன் படித்தால் அளவற்ற செல்வம், நீண்ட ஆயுள், திருமண யோகம், பிள்ளை பேறு ஆகியவை கிடைக்கும். முடிவில் முருகப் பெருமானின் திருவடியையும் அடைவார்கள்.

கந்த குரு கவசத்தில்,

"அஷ்ட ஐஸ்வர்யம் தரும் அந்தமில்லா இன்பம் தரும்
ஆல்போல் தழைத்திடுவன் அறுகுபோல் வேரோடிடுவன்
வாழையடி வாழையைப்போல் வம்சமதைப் பெற்றிடுவன்
பதினாறும் பெற்றுப் பல்லாண்டு வாழ்ந்திடுவன்"

(கந்த குரு கவசம் *384 - 387*)

அருட் பெரும் ஜோதியான ஆறுமுக ஸ்வாமியுமே
அந்தர் முகமிருந்து ஆட்கொள்வான் சத்தியமாய்

(கந்த குரு கவசம் *199-200*)

என்று கூறியுள்ளதைப் போல் இந்தச் சுப்பிரமணிய புஜங்கத்தைத் தொடர்ந்து படிப்பவர்களுக்கு நீண்ட ஆயுள், நிறைவான செல்வம், உயர்ந்த புகழ் ஆகியவை கிடைக்கும். இம்மையிலும் மறுமையிலும் பதினாறு பேற்றைப் பெற்று முருகனின் திருவடியை அவர்களும் அவர்களுடைய பரம்பரையில் உள்ள அனைவரும் அடைவார்கள் என்பது

திண்ணம். மேலும் இதனைப் போன்றே திருப்புகழில்,

"இருப்பவல் திருப்புகழ் விருப்பொடு படிப்பவர்
இடுக்கினை யறுத்திடு - மெனவோதும்" (திருப்புகழ்)

உயிர் போகக்கூடிய வழிக்கு உற்ற துணையாய் இருக்கும் அவல் போன்ற திருக்குறளை ஆர்வத்தோடு படிப்பவர்களுடைய சங்கடங்களை அறுத்தெறியும் என்னும் உண்மையை எடுத்துச் சொல்வேன் என்கிறார் அருணகிரிநாதர்.

குறிப்புகளுக்காக

இந்நூலாசிரியர்களைப் பற்றி...



முனைவர் மீனாட்சி எம்.ஏ., எம்.பில்., பி.எச்.டி

கடந்த 5 ஆண்டுகளாகத் தமிழ்த்துறை உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரியில் பணியாற்றியவர். தற்போது கோயம்புத்தூர் கற்பகம் தொழில் நுட்பக் கல்லூரியில் பணியாற்றி வருகின்றார். 60 க்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார்.

கலித்தொகையில் மெய்ப்பாடு எனும் தலைப்பில் முனைவர் பட்ட ஆய்வினை மேற்கொண்டுள்ளார். தமிழ் முகில் விருது, பாரதி தமிழ்ச் செல்வர் விருது எனப் பல விருதுகளைப் பெற்றவர். ஆன்மீகத்தில் அதிக ஈடுபாடு கொண்டவர்.



முதுமுனைவர். ரெத்தினம் சந்திரமோகன்

“திருக்குறள் ஒரு உலக அதிசயம்” என்று கருதும் பேராசிரியர் ரெத்தினம் சந்திரமோகன் இயற்பியலில் முனைவர் பட்டம் பெற்று தைவானில் ஆய்வு மேற்படிப்பு பெற்றவர். காரைக்குடி அழகப்பா கல்வி நிறுவனங்களில் ஆறாம் வகுப்பு முதல் முனைவர் பட்டம் வரை பெற்றவர். தேவகோட்டை சேவுகன் அண்ணாமலைக் கல்லாரியில் 30 ஆண்டுகளாய் பேராசிரியராகவும் 5 ஆண்டுகள் முதல்வராகவும் பணியாற்றியவர்.

முதல்வர் பணிக்காலத்தில் திருக்குறளுக்கு பன்னாட்டு கருத்தரங்கம் நடத்தியவர். கோவைக் செம்மொழி மாநாடு, பாண்டிச்சேரி “வான் புகழ்” மாநாடு மற்றும் சைவ சித்தாந்த மாநாடுகளிலும், மலேசியா, கனடா நாடுகளில் திருக்குறளில் நுண்பொருள், “திருக்குறளில் நானோ தொழில் நுட்பம்” போன்ற தலைப்புக்களில் உரையாற்றியவர். காரைக்குடி வீறு கவி முடியரசனார் அவைக்களத்தின் முன்னாள் தலைவர். சைவ சித்தாந்த ரெத்தினம் பட்டத்தினை திருவாடுதுறை ஆதீன தேவகோட்டை பயிற்சி மையத்தில் பெற்றவர். இவரது தமிழ் நூல்கள் நிலை ஒலி, வியக்கவைக்கும் கருந்துளைகள் நல்ல வரவேற்பைப்பெற்றன.



ராஜமீனாட்சி. ச, எம்.ஏ., எம்.பில்., பி.எட்.,

கடந்த 15 ஆண்டுகளாக கல்வித் துறையில் அர்ப்பணிப்புடன் பணியாற்றி வரும் ஒரு சிறந்த ஆசிரியர். கவிதைகளைப் பற்றிய தனிப்பட்ட பற்றுடன், பல ஹைக்கூக் கவிதைகள் மற்றும் கட்டுரைகள் எழுதியிருக்கிறார். இவரது கவிதைகள் பல போட்டிகளில் வென்றும், பாராட்டுகளும் பெற்றுள்ளன.

இவர் பல தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்கில் பங்கு பெற்று பல கட்டுரைகளை சமர்ப்பித்துள்ளார். மேலும் இவர் தன்னுடைய கல்வி பணிக்காக தமிழால் இணைவோம் உலகத் தமிழ் சங்கம் மூலம் “தங்க மங்கை விருது” பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்த நூல், அவருடைய முதல் ஆங்கில மொழிபெயர்ப்பு முயற்சி என்பதோடு, ஒரு பக்தி இலக்கியக் கிரியை என்பதாலும் மிகவும் தனித்துவமானது. திருச்செந்தூர முருகப்பெருமானின் பக்தையாக, அவரை மகிழ்வுறச் செய்யும் இந்த பணி, ஒரு புனித அர்ப்பணிப்பு என்று அவரால் கருதப்படுகிறது.

மொழியின் இயல்பையும், பக்தியின் ஆழத்தையும் ஒருங்கிணைத்துச் செய்யப்படும் இந்த முயற்சி, புனிதம், பண்பு, பாசம், பக்தி ஆகியவற்றின் சங்கமமாகும். இந்த நூல், வழிபாட்டின் சுவையை மொழியின் வழியே பரப்பும் ஒரு அருமையான ஆன்மிகப் பயணத்தின் தொடக்கமாகும்.

பதிப்பகத்தார்

ISBN : 978-93-6854-418-0